விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 08 வெள்ளிக்கிழமை (24.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பெற்றோரும் ஆசிரியர்களுமே எனது வெற்றிக்கு காரணம்

### யாழில் முதலிடம் பெற்ற மாணவி தாரணி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பெற்றோர்மற்றும் அதிபர், ஆசிரியர்களின் முழு ஒத்துழைப்பே எனது வெற்றிக்குக் காரணம் என உடுவில் மகளிர் கல்லூரி மாணவியும், தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவியுமான தாரணி பாலேந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து வலம்புரிக்கு பேட்டியளித்த தாரணி மேலும் கூறியதாவது,

எனது அப்பா ஒரு சிற்பக்கலைஞர். நாங்கள் சுன்னாகம் ஐயனார் கோவிலடியில் வசித்துவருகிறோம். (18ஆம் பக்கம் பார்க்க)

## தரம்–4 படிக்கவே இல்லை 5ஆம் தரத்தில் முதலிடம்!

### முல்லைத்தீவு மாணவன் சாதனை

(யாழ்ப்பாணம்)


புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலய மாணவன் ஜெயானந்த ராஜா கிரிசிகன் தரம் –5 புலமைப்பரிசில்பரீட்சையில்187 புள்ளிகளைப்பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து 4ஆம் ஆண்டுக்கான கல்வி எதனையும் கற்காத நிலையில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று கிரிசிகன் சாதனை புரிந்துள்ளார்.

வன்னி (18ஆம் பக்கம் பார்க்க)



# இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்!



### ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி உரை

(நியூயோர்க்)

தமிழீழ விடுதலைப் புலிகளால் தான் யுத்தத்திற்குத் தள்ளப்பட்ட போதிலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையே சிறந்தவழி என தான் இன்னும் நம்புவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறினார். ஐ.நா. பொதுச்சபையில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இலங்கைப் பிரச்சினைக்கு உள்நாட்டில் ஏற்படுத்தப்படும் தீர்வைக் காண்பதற்கு சர்வதேச ஆதரவை வரவேற்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். உலக சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐ.நாவுக்குரிய ஆணையை குறைத்து மதிப்பிடக் கூடாது எனவும் அவர் கூறினார். (18ஆம் பக்கம் பார்க்க)

## அயோத்தி தீர்ப்பு ஒத்திவைப்பு

(மும்பை)

இந்தியாவில் மிகுந்த பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட சர்ச்சைக்குரிய பாபர் மசூதி அமைந்திருந்த நிலம் யாருக்கு சொந்தம் என்கிற வழக்கின் தீர்ப்பை நிறுத்திவைக்குமாறு அலஹாபாத் உயர் நீதிமன்றத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து அலஹாபாத் உயர் நீதிமன்றத்தில் லக்னோ கிளையில் வெள்ளிக்கிழமை வழங்கப்படுவதாக (18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரி மாதம் ஆசிரியர் இடமாற்றம்

(திருகோணமலை)

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் அண்மையில் வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்கள் அடுத்த ஆண்டு முதலாம் தவணை ஆரம்பத்திலே வழங்கப்படுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் வடக்கு மாகாணக்கல்வித் திணைக்கள (18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஈழக் கனவை தகர்ப்பதற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு அவசியம்



### அவசரகாலச் சட்டத்தை ஆரம்பித்து பிரதமர் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஈழக் கனவை தகர்ப்பதற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு மிகவும் அவசியமானதென பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பிலான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம் பித்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழக்கனவை நனவாக்கும் நோக்கில் நாட்டுக்கு வெளியே சில (18ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்துக்குச் செல்ல பொன்சேகாவுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்து கொள்கின்றமைக்கு படைத்தரப்பால் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா எம்.பிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக கேள்வி எழுப்பின. ஐக்கிய தேசியக் கட்சியின் தயாசிறி ஜயசேகர இது பொன்சேகாவின் நாடாளுமன்ற சிறப்புரிமை மீதான மீறுகை என்று சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை அங்கு கிளப்பினார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான அநுர குமார திஸ்ஸ (18ஆம் பக்கம் பார்க்க)

## லசந்த படுகொலைச் சம்பவத்துடன் சரத் பொன்சேகாவிற்கு தொடர்பு

### மேர்வின் சில்வா குற்றச்சாட்டு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவத்துடன் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவிற்கு தொடர்பு இருப்பதாக பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

லசந்த படுகொலைச் சம்பவத்திற்கும் சரத் பொன்சேகாவிற்கும் தொடர்பு இருப்பதாகவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் காணப்படுவதாகவும் (18ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடன் மோதல் போக்கை ஏற்படுத்தும் எண்ணம் தமிழ்க் கூட்டமைப்பிடமில்லை



## இரா.சம்பந்தன் பி.பி.சிக்குச் செவ்வி

(கொழும்பு)

இலங்கை அரசோடு தற்போதைக்கு மோதல் போக்கைக் கடைப்பிடிக்கும் எண்ணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அரசை எவ்வாறாவது ஒரு வழிக்குக் கொண்டு வந்து தமிழர் நலன்குறித்த விடயங்களை நிறைவேற்றவே தாங்கள் எண்ணிக் கொண்டிருப்பதாகவும் சம்பந்தன் பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த விடயங்கள் குறித்து அரசுடன் இணைந்து இயங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரியிருப்பதாகவும் இது குறித்து அரசுடன் சேர்ந்து பணியாற்ற தமது அமைப்பிலிருந்து சிலரின் பெயர்களைக்.கூட்டமைப்பு அரசிடம் அளித்திருப்பதாகவும் ஊடகச் செய்திகள் கூறின.

**ஒன்றும் புதிய விடயமல்ல**

இந்தப் பிரச்சினை குறித்துத் தமிழோசை இரா.சம்பந்தனிடம் கேட்டபோது, இது ஒன்றும் புதிய விடயமல்ல. யுத்தம் காரணமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களைச் சரி செய்யவும் மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு போன்றவற்றுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகக் கூட்டமைப்புத் தெரிவித்த நிலையில்,

இது குறித்து அரசு நியமிக்கவுள்ள குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக இடம்பெறும் உறுப்பினர்கள் பெயரைத் தருமாறு சமீபத்தில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேட்டிருந்தார்.

இதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலரது பெயர்கள் அரசுக்குத் தரப்பட்டிருக்கின்றன.

**இன்னும் பேச வேண்டியுள்ளது**

ஆனால் அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடன் பேசியிருந்தாலும் இது தொடர்பில் இன்னும் விரிவாகப் பேச வேண்டியிருக்கின்றது.

போர் முடிந்து சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ஆகியிருந்த நிலையில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் அரசியல் தீர்வு உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளிலும் நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்தின் சார்பில் அவசரத் தன்மை காட்டப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் போதிய அழுத்தம் தரவில்லை என்ற கருத்துக்களை முற்றிலும் மறுக்க முடியாது. இந்தக் கால கட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவை நடந்திருக்கின்றன.

அரசு, அவர்களுக்குத் தேவையான அரசியல் சட்ட திருத்தத்தை நிறைவேற்றிருக்கின்றது என்றார்.

**தேவையை நிறைவேற்ற வேண்டும்**

ஆனால் இந்தத் தருணத்தில் அரசுடன் மோதல் போக்கைக் கையாளாமல் அரசை ஒரு வழிக்குக் கொண்டு வந்து, தமிழர்களுக்குத் தேவையான காரியங்களை ஆற்ற முயன்று கொண்டிருக்கின்றோம்.

இராஜதந்திர ரீதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச வேண்டியவர்களுடன் பேசியிருக்கின்றது. குறிப்பாக இந்தியாவுடன் பேசியிருக்கின்றது.

இது தொடர்பாக இந்தியா தனது கருத்தை அரசுக்கும் தமக்கும் ஏனையவர்களுக்கும் அறிவித்திருக்கின்றது. இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் சமீபத்தில் இலங்கை சென்று அரசுடன் விவாதித்திருக்கின்றார்.

இந்திய வெளியுறவு அமைச்சரும் விரைவில் இலங்கை செல்லவுள்ளார் என்றார் சம்பந்தன். (ச-5)

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை முற்றுகையிட்டுத் தடுத்து வைத்த குற்றச்சாட்டின் காரணமாக பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரை இரு வார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க இரு மாதங்களுக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்தபோது அவரை மேற்படி மாணவர்கள் முற்றுகையிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம் மாணவர்கள் நேற்றுக் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரானதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார். பகிடிவதைச் சட்டத்தின் கீழ் இம் மாணவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-5)

# வடக்கு மாகாண ஆங்கில தினப் போட்டி ஒக்டோபர் மூன்றாம் வாரத்தில் மன்னாரில்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(வவுனியா)

வட மாகாண ஆங்கிலத் தினப் போட்டி ஒக்டோபர் 3-வது வாரத்தில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரியில் 3 நாள்கள் நடைபெறும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் ஆங்கில தின எழுத்தாக்கல் போட்டிகள் ஒக்டோபர் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வவுனியா முதல்நிலை அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

2010 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண ஆங்கில தின எழுத்தாக்கல் போட்டிகள் எதிர்வரும் ஒக்டேபர் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடத்தப்படும்.

அத்துடன் ஆங்கில தினப் போட்டிகள் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரியில் 3 தினங்கள் நடத்தப்படும்.

இதற்கான திகதிகள் விரைவில் தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (ச-5)

**மனோதத்துவ வைத்தியம்**

*(General Psychotheraphy)*

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

20.09.2010 முதல் 27.09.2010 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

**கமால் ரூரிஸ் இன்**

(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)

வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,

392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

(C-1267)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது புதிய தடைகளை அரசு ஏற்படுத்துகிறது

## பணியாளர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிப்படைந்த தமிழ் மக்களுக்கு உதவிகளை மேற்கொண்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது இலங்கை அரசு புதிய தடைகளைக் கொண்டு வந்துள்ளதால் அவை கடும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடக்குக் கிழக்கில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தம்மைப் பதிவு செய்து கொள்வதிலும் தமது பதிவுகளைப் புதுப்பித்துக் கொள்வதிலும் அதிக நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன.

இந்த நடைமுறைகளில் அரசு புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளது.

தமது பதிவுகளை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஜனாதிபதி நடவடிக்கைக்குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் அனுமதிகளைப் பெற வேண்டும்.

இந்த அனுமதிகளைப் பெறுவது மிகவும் கடினமானது என அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி ஒருவர் செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.(ச-4)

**அருள்முருகன் திருமண சேவை**

Regd No: J/DS/PR/021/2007

Doctors, Engineers, Lawyers, Teachers, Accountants, வெளிநாடு மணமக்கள் உட்பட விரும்பும் மணமக்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளலாம்.

03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன்
(ஆரியகுளம் உயர்கல்லூரி சமீப லேன்),
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி. 021 222 9334

(2530)

செல்லா சினிமா

09.09.2010 முதல்



மம்முட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு

**வந்தே மாதரம்**

அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்

D.இமான் ஹென்றி அரவிந்த்.T.

பாடல்கள் : வைரமுத்து. நந்தலாலா. சினேகன். விவேகா.

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

# பொலிஸ் சேவையில் இணைவதற்கு 4 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் விண்ணப்பம்

## பொலிஸ் மா அதிபர் தகவல்

4 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் இலங்கைப் பொலிஸில் இணைந்து கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் இவர்களில் 340 பேர் இலங்கைப் பொலிஸில் இணைக்கப்பட்டுள்ள்தாகவும் பொலிஸ் மாஅதிபர் மகிந்த பாலசூரிய தெரிவித்தார்.

தற்போது மேற்படி 340 தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

இப் பயிற்சி நிறைவடைந்தவுடன் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் நியமிக்கப்படவுள்ளனர்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து மேலும் பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சேர்க்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படும் எனவும் பொலிஸ் மாஅதிபர் மகிந்த பாலசூரிய கூறினார்.

இதேவேளை ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் எழுதுவது தொடர்பில் கற்பிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## புண்ணியம்

எமலோகத்தில் ஒரு ஆசாமியைக் கொண்டு போய் நிறுத்தினார்களாம். எமதர்மராஜா தன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தார். இந்த ஆள் பரிதாபமாக அவருக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தார். பக்கத்தில் பதிவேட்டைப் புரட்டிக் கொண்டு சித்திரகுப்தன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன தப்பு பண்ணினான் இவன்?" என்று எமதர்மராஜா கர்ஜித்தார். சித்திரகுப்தன் அந்த ஆசாமியின் கணக்கைப் பார்த்தான். அவனுக்கே தலை சுற்றியது.

பண்ணிய பாவம் ஒன்றிரண்டாக இருந்தால் பட்டியல் போட்டு சொல்லி விடலாம். பஞ்சமா பாதகம் அத்தனையும் பண்ணியிருக்கிறான். அதனால்– "கணக்கு வழக்கில்லாமல் இவன் தவறு செய்திருக்கிறான். இந்த ரெஜிஸ்டர் முடிந்து இன்னொரு ரெஜிஸ்டருக்கும் போயிருக்கிறது. அதையெல்லாம் தேடி எடுக்க வேண்டுமானால் அதற்குள் நம்முடைய ஆயுள் முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றான் சித்திரகுப்தன்.

எமதர்மன் பார்த்தார்.

"அப்படியானால் இவனைக் கொண்டு போய் நரகத்தில் தள்ளு" என்று உத்தர விட்டார். பதிவேட்டில் ஒரு வரி மட்டும் "பளிச்"சென்று தெரிந்தது. உடனே சித்திரகுப்தன்:

"இவன் இத்தனை பாவங்களைப் பண்ணியிருந்தாலும் கூட ஒரேயொரு புண்ணியம் மட்டும் செய்திருக்கிறான்" என்றான்.

"என்ன அது?" என்று எமதர்மன் கேட்டார்.

"இந்த ஆளை, ஒரு நாள் ஒரு கிழவி, கோயிலுக்குப் போவதற்கு வழி கேட்டபோது, "அதோ அந்தப் பக்கமாகப் போ" என்று ஒரு விரலால் வழிகாட்டியிருக்கிறான் என்று சொன்னான் சித்திரகுப்தன்.

உடனே எமதர்மன் தீர்ப்பை திரும்ப பரிசீலித்தார்.

"அப்படியானால், இவனுடைய அந்த ஒரு விரலுக்கு மட்டும் பன்னீர் தெளித்து சந்தனம் பூசி சொர்க்கத்துக்கு அனுப்பு. மற்றப்படி இவனை நரகத்தில் தள்ளு" என்று உத்தரவிட்டார்.

பாவம் செய்துவிட்டு நரகத்துக்குப் போகிறவர்களுக்கு மட்டும் தான் இந்தப் பிரச்சினை என்றில்லை.

புண்ணியம் செய்துவிட்டு சொர்க்கத்திற்குப் போகிறவர்களுக்கும் கூட சில பிரச்சினைகள் ஏற்படுவதாகத் தெரிகிறது.

கர்ணன் – மிகப்பெரிய கொடையாளி. யார் எதைக் கேட்டாலும் 'இல்லை' என்று சொல்வதில்லை.

அவன் பொன்னையும் பொருளையும்தான் தானமாகக் கொடுத்தான். 'பசி' என்று வந்தவர்களுக்கு 'புசி' என்று சொல்லி எதுவும் கொடுத்ததில்லை.

ஒரு வேளை பசித்தவர்கள் யாரும் கர்ணனை தேடிப் போகாமல் இருந்திருக்கலாம். அப்படிப் போகாததால் 'அன்னதானம்' செய்யக் கூடிய வாய்ப்பு கர்ணனுக்கு கிடைக்காமல் போயிருக்கலாம்.

அப்படிப்பட்ட கொடையாளியான 'கர்ணன்' இறந்தபின் சொர்க்கத்துக்குப் போனான்.

சொர்க்கத்துக்குப் போகும் யாருக்கும் பசிக்காது. ஆனால் கர்ணனுக்குப் பசித்தது.

"ஏன் எனக்கு மட்டும் பசிக்குது?" என்று சொர்க்க வாசலில் நின்று கொண்டிருந்த ஒருத்தரைப் பார்த்துக் கேட்டானாம் கர்ணன்.

"பூலோகத்தில் நீ யாருக்குமே அன்னதானம் செய்யவில்லை. அதனால்தான் உனக்குப் பசிக்கிறது" என்றானாம் அந்த ஆள்.

"அப்படியானால் இப்பொழுது என்ன செய்வது? பசி வயிற்றைக் கிள்ளுகிறதே" என்று கவலைப்பட ஆரம்பித்தானாம் கர்ணன்.

உடனே அந்த ஆள் ஒரு யோசனை சொல்லியிருக்கிறான். என்ன தெரியுமா?

"கர்ணா, உன்னுடைய ஆட்காட்டி விரலை வாயில் வைத்துக் கொள். பசி சரியாகப் போய்விடும்." என்று சொல்லியிருக்கிறான். உடனே கர்ணன் அதேமாதிரி செய்தானாம். பசி மறைந்துவிட்டதாம்.

இதற்கு என்ன காரணம்? ஒரு சமயம் கண்ணனுடைய தேர்ப்பாகர்களுக்கு சாப்பிடுவதற்கான இடத்தை தன்னுடைய ஆட்காட்டி விரலால் சுட்டிக்காட் டினான் கர்ணன். அதுவே பெரிய தர்மமாக கர்ணனின் கணக்கில் சேர்ந்து போய்விட்டதாம். இது எப்படி இருக்கிறது.

புராணத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கோ இல்லையோ, அதைப்பற்றி இப்பொழுது நாம் ஆராய வேண்டாம். சொர்க்கம், நரகம் எங்கேயிருக்கிறது என்று யோசித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

ஆனால் மனிதப்பிறவியின் மகத்துவத்தை மனிதனாகப் பிறந்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதற்காகத் தான் இப்படியான கதைகளெல்லாம்.

அதுதான் ஒரு பெரியவர் சொன்னார்.

உண்ணவும் உறங்கவும், பிறந்தவை மிருகங்கள். எண்ணவும் இரங்கவும் பிறந்தவன் மனிதன் என்று. இரக்கப்படத் தெரியவில்லையானால் அவன் மனிதனா? எனக்குத் தெரிந்த பேச்சாளர் ஒருத்தர் இருந்தார்.

அவர் எந்த ஊருக்குப் பேசப்போனாலும் 25 ரூபாய்க்கு மேல் யாரும் கொடுப்பதில்லை. கூட்டம் நடத்துபவர்களுக்கு கொஞ்சம் கூட இரக்கமே இல்லை சேர் என்று அவர் குறைப்பட்டுக் கொள்வார்.

சமீபத்தில் அவர் ஒரு கூட்டத்திற்குப் போயிருக்கிறார். வழக்கம் போல 25 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். அதை வாங்கிக் கொண்டு – முணுமுணுத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தாராம். கொஞ்சத் தூரம் வந்திருப்பார். கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர் கையை நீட்டி கூப்பிட்டுக் கொண்டு ஓடி வந்திருக்கிறார்.

இவருக்கு கொஞ்சம் ஆறுதல்... பரவாயில்லை இப்பொழுதாவது அவர்களுக்கு புத்தி வந்திருக்கிறது. இன்னும் ஒரு 25 ரூபா கொடுப்பதற்காகத்தான் வருகிறார் போலிருக்கு என்று நினைத்தார். அவரிடம் ஓடிவந்து–

"சேர், கை தவறுதலாக உங்களிடம் 10 ரூபா அதிகமாக கொடுத்துவிட்டேன். அதை வாங்கிக்கொண்டு போவதற்குத் தான் ஓடி வருகிறேன்" என்றாராம்.

இவர்களெல்லாம் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போனால் என்ன சேர் செய்வார்கள்?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிராமங்களில் பிறந்தவர்களே நாட்டின் தலைவர்கள் ஆகின்றனர்

## கல்வி அமைச்சர் உரை

நாட்டிற்கு தலைவர்களாக தெரிவாவது கிராமத்தில் பிறந்தவர்களே என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிங்கள இலக்கிய தேசிய விருது வழங்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனை தெரிவித்தார்.

இந்த முறை இடம்பெற்ற 5ஆம் ஆண்டுபுலமைப்பரிசில்பரீட்சையிலும் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்ட மாணவர் பிறந்தது கிராமத்திலேயே என்பதையும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு கிராம மாணவர்கள் சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையிலேயே கிராமத்துப் பாடசாலைகளை பிரபல பாடசாலைகளாக மாற்றுவது மகிந்த சிந்தனையின் நோக்கமாகவுள்ளது.

அத்துடன் இலங்கையில் தாய் மொழித் தேர்ச்சி கவலைப்படும் நிலையில் உள்ளது. 5 ஆம் ஆண்டு பரீட்சையில் தமது தாய்மொழியில் தோற்றிய மாணவர்களில் 18 சதவீதமானோருக்கு எழுதவாசிக்க தெரியாதுள்ளது. இவ்வாறான நிலையில் இவர்கள் உயர் கல்வியை தொடர்வதில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இதனை நிவர்த்தி செய்ய கல்வி அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதென கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-4-2)

# கணனி பயிற்சி பெறாத அதிபர், ஆசிரியர்களுக்கு

ICDIA E-Citezen கணனிப் பயிற்சி பெறாத யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் தங் கள் பெயர்களை யாழ். கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரிவின் தகவல் தொழில்நுட்ப இணைப்பாளரிடம் சமர்ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (2-4)

# கற்கைநெறிகளுக்கான தெரிவு பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சமூக கற்கைகள் துறையினரால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி (Cerficate in Social Sciences), கலைமாணி (B.A in Social Sciences) ஆகிய இரு கற்கை நெறிகளுக்கான அனுமதித் தெரிவுப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இக்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் பரீட்சையில் தவறாது கலந்து கொள்ளுமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (2)

# முன் ஆயத்தமில்லாத ஆங்கிலப் பேச்சு நிகழ்வு

கரவெட்டி நவீனஸ்ஆங்கிலமொழி வகுப்புக்களில் கல்வி பயிலும் தரம் 11 மாணவர்கள் பங்குபெறும் முன் ஆயத்தமில்லாப் பேச்சு ஆங்கிலம் என்னும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கே.சிவராமன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். மேலும் மாணவர்கள் சபையோர் வழங்கும் விடயத் தலைப்புக்களுக்கேற்ப பேசுவார்கள் என குறிப்பிடப்படுகிறது. (2-4)

# இராசி பலன்

*24.09.2010*
*(புரட்டாதி 8, வெள்ளிக்கிழமை)*
*பிரதமை பிற்பகல் 4.47 மணிவரை*
*உத்தரட்டாதி பிற்பகல் 12.30 மணிவரை*
*இராகுகாலம் 10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் 6.02-7.32 மணிவரை*
*மாளயபட்ச ஆரம்பம், சித்தாமிர்தம்*

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொழுது போக்கு விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படும், நூதனப் பொருட் சேர்க்கையுண்டு, ஆலய வழிபாட்டில் நாட்டம் அதிகரிக்கும்.

**இடபம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும் நாள், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், உற்றார், உறவினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கட்டடப் பணியை தொடரும் எண்ணம் மேலோங்கும், செய்தொழில் முன்னேற்றமுண்டு, அந்நியர் சந்திப்பின் மூலம் அனுகூலம் கிடைக்கும்.

**கடகம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், மறதியால் விட்ட பணியை மீண்டும் தொடங்குவீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், தெய்வனுகூலமுண்டு.

**சிங்கம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும், உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, நட்பொன்று பகையாகலாம், உடல் நலனில் அக்கறை தேவை.

**கன்னி** குடும்பத்தாருடன் குதூகலப் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பொருட் சேர்க்கையுண்டு, உறவினர் வருகையால் சுகம் காணும் நாள்.

**துலாம்** காலையிலேயே விருந்தினர் வருகையேற்படலாம், நல்லவர்களின் நட்பு கிட்டும், உடல் நலம் சீராகும், உறவினரிடையே ஏற்பட்ட பகை மாறும், நல்ல செய்திகள் நாடி வரும் நாள்.

**விருச்சிகம்** விழாக்களில் கலந்துகொண்டு மகிழும் நாள், வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், தொலைபேசித் தகவல் உறுதுணையாக இருக்கும், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் எண்ணம் தோன்றும்.

**தனுசு** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், நேர்மையான நண்பர்களால் உதவிகள் கிடைக்கும், வாகன யோகமுண்டு, அரசியல் செல்வாக்கு மேலோங்கும், தெய்வ வழிபாட்டால் அமைதி ஏற்படும்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமைசேரும் நாள், சிலர் உங்களிடம் தொழில்ரீதியாக உதவிகேட்டு வரலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், இளைய சகோதர வழியில் இனிய செய்தி வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலை உயரும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள்.

வளவன்

# கலை விழா கண்காட்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


உள்ளூராட்சி வார விழாவை சிறப்பிக்கும் முகமாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் அராலி குடும்ப முன்பள்ளி சிறார்களின் கலை விழாவும் கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அராலி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் சங்கச் செயலாளர் திருமதி த.சிவரஞ்சினி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுழிபுரம் வலிமேற்கு பிரதேச சபைச் செயலாளர் எஸ். புத்திசிகாமணி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக அராலி பிரதேசசபை உப-அலுவலரான க.மகேசனும் சிறப்புவிருந்தினராக வலிமேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி இ.சத்தியகுமாரியும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 70 |
| தக்காளி | 70 | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 60 |
| கோவா | 60 | 50 | 90 |
| கரட் | 70 | 40 | 80 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 70 |
| சின்ன வெங்காயம் | 70 | 50-70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | -- | 90 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 50 | 40 | 80 |
| லீக்ஸ் | 80 | 120 | 120 |
| பீற்றூட் | 30 | 20 | 50 |
| கறிமிளகாய் | 60 | 40 | 70 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 120 |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-40 | 30 |



யாழ்.கல்வி வலய தரம் II, III அதிபர்களுக்கான கல்வி பண்பு சார் தரத்தை உறுதி செய்வதற்கான மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டு வேலைத் திட்டம் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது.இதில் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ பிரதி கல்விப் பணிப்பாளர் ரி.ராஜலிங்கம் மற்றும் ஆசிரிய வளநிலைய ஆசிரிய ஆலோசகர் எஸ்.ரட்ணசிங்கம் ஆகியோர் செயலமர்வில் உரை நிகழ்த்துவதையும், இச்செயலமர்வில் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :

## விழிப்புக்குழு தெரிவு

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தொல்புரம் மேற்கில் "கலைவாணி விழிப்புக் குழு" அமைக்கப்பட்டுள்ளது.கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் எஸ்.பஞ்சாட்சரம் தலைமையில் J/169 கிராம சேவகருடன் இணைந்து சமூக முன்னேற்றம், வளர்ச்சி கருதி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தலைவராக கே.திருவம்பலம், உப தலைவராக எஸ்.பஞ்சாட்சரம், செயலாளராக பி.ஜெயகரன், உபசெயலாளராக வி.இராஜேந்திரம், பொருளாளராக கே.சேனாதிராஜா நிகழ்ச்சித்திட்ட அலுவலர் வி.நடுநாயகமூர்த்தி ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.பூமிபாலன், எஸ்.நாகமணி, வி.தனபாலசிங்கம், எம்.நடராஜா, ரி.தரசிங்கம், ரி.மதியழகன், எம்.இளங்கேஸ்வரன், எம்.பத்மநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் வேலைக்காக உயரழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் உயர் அழுத்த மின்மார்க்கங்களில் அவசர திருத்தவேலைகள் காரணமாக நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் குருநகர், நாவாந்துறை, கொட்டடி, யாழ்ப்பட்டணப் பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (4)

## பொதுக்கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபையின் எழுபதாவது ஆண்டுப்பொதுக்கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு எதிர்வரும் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மூ.சு.வேலாயுதபிள்ளையின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளதால் சைவ அபிமானிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சபையின் செயலாளர் து.நாகேந்திரன் கேட்டுள்ளார். (4-246)

(பொற்பதி)

வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு குடத்தனை திறந்த வெளி நலன்புரி நிலைய பொதுமண்டபத்தில் நடைபெறும்.இக் கூட்டத்திற்கு சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2-7-64)

# இரு வெவ்வேறு வீதி விபத்தில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

மாலுச்சந்திப் பகுதியில் இரு வெவ்வேறு வீதி விபத்துச் சம்பங்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை கடற்பரப்பில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற வேளை கடற் பாறையிலிருந்து தவறி விழுந்த பருத்தித்துறை கல்லூரி வீதியைச் சேர்ந்த மனோகரன் மயூரன் வயது 21 என்ற இளைஞரே கால் முறிந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மற்றொரு சம்பவத்தில் ஆட்டோ, சிறிய உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் ஆட்டோவில் பயணம் செய்த கரவெட்டியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சிவராசா வயது 39 என்பவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-24)

## 108 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் கோவிலின் அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை 108 சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

மேலும் உற்சவ காலங்களில் யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் பிரதம மேற்பார்வையாளர் கு.கைலாசப்பிள்ளையின் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## விளையாட்டுப்போட்டி

(அல்வாய்)

தும்பளை சிறுமலர்கள் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் பருத்தித்துறை சட்டத்தரணி சபா.நவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.இதில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (2-7-19)




# திருமறைக் கலாமன்றத்தின் முத்தமிழ் சங்கமம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் முத்த தமிழ் சங்கமம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறும் தொடர்ந்து காலை அமர்வின் போது முத்தமிழ் சங்கமம் நிகழ்வை முன்னிட்டு தேச வழமை என்னும் மையப் பொருளில் நடத்தப்படும் பேச்சுப் போட்டிகள் இடம்பெறும்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் மாலை அமர்வின்போது 6 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் கலாநிதி செ.திருநாவுக்கரசு கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேசச்செயலர் சி.எ. மோகன்ராஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளாக நடனங்களும் திருமறைக் கலாமன்ற இளையோர் அவையினர் வழங்கும் வில்லிசையும் இடம்பெறும். மாலை நிகழ்வுகள் அனைத்தும் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் தொடர்ந்து சிறுகதைப் பயிலரங்கு இடம்பெறுவதால் இதில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றலாம். கலைநிகழ்வுகள் மாலை அமர்வின் போது 6 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசிலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளாக நடனங்களும் சிறப்பு நிகழ்வாக கவிச்சமரும் நடைபெறும். மாலை நிகழ்வுகள் அனைத்தும் திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி. பி.எவ்.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.முத்தமிழ் சங்கமம் நிகழ்வுகளின் மூன் றாம் நான்காம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிகளில் நடைபெறும். முத்தமிழ் சங்கமம் நிகழ்வுகள் ஒன்பது நாட்களுக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(காரைநகர்)

காரைநகர் அபிவிருத்தி சபைக்கு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 19 ஆம் திகதி காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக யாழ்.புடைவையக உரிமையாளர் க.சோமசேகரம், உப தலைவராக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் மு.இலட்சுமணன்,செயலாளராக சுப்பசூஸ் நிறுவன உரிமையாளர் இ.ஜெயராசா,உப செயலாளராக பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர் க.பாலசுப்பிரமணியம், பொருளாள்ராக யாழ். புடைவையக உரிமையாளர் த.சற்குணராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 10 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினம், சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் ப.ஐங்கரன்,கிராமசேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம்,தோப்புக்காடு கிராம அபிவிருத்திச்சங்க உத்தியோகத்தர் ப.ஜெயராமன், ஆசிரியர் செ.அருட்செல்வம், வர்த்தகர் ச.நேசேந்திரன் யாழ். போதனா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர் க.பிரதீபன், கடற்றொழிலாளர் சங்க தலைவர் க.இராசச்சந்திரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரைநகர் பிரிவு தலைவர் சோ.விக்னேஸ்வரன், இலங்கைப்போக்குவரத்து சபையின் காரைநகர் சாலை முகாமையாளர் க.கந்தசாமி ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (2-4-246)

## குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான மீள்நியமனம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள தீவகப் பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில் மீள்நியமனம் பெற்று பணிபுரிய விரும்பும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் உடனடியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (2-4)

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு புதிய முச்க்கரவண்டி ஒன்று அமெரிக்காவைச் சேர்ந்த சர்வதேச மருத்துவ சுகாதார கழகத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வண்டி நெடுந்தீவு வைத்தியசாலையிலிருந்து நோயாளர்களை அம்புலன்ஸ் படகில் ஏற்றி இறங்குதுறைக்கு கொண்டு செல்ல பயன்படும் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (2-4)



எடிசன் அக்கடமியின் மாணவர்களுக்கான வருடாந்த செயல் மதிப்பிடல் – 2010 நிகழ்வு அண்மையில் யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களுக்கு எடிசன் அக்கடமி கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரிக்கா நாகேந்திரன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், மாணவர்கள் காட்சிப்படுத்துதல் மூலம் விளங்கப்படுத்துவதையும் நிகழ்வின் தலைவர் பி.ரகுமார் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் – எஸ்.கரன்)

# வெளிநாடுகளில் கல்வியைத்தொடரவுள்ள மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு

## நாளை டில்கோ ஹோட்டலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி விட்டு உள்ளூர் அல்லது வெளிநாட்டு கற்கை நெறிகளை தொடர்வதற்கு தயாராகும் மாணவர்களின் நலன் கருதி இலவசக் கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10.30 மணியிலிருந்து பி.ப. 2 மணியளவில் யாழ். காங்கேசன் துறை வீதியில் 70/6 ஆம் இலக்கத்தில் உள்ள டில்கோ ஹொலிடெய்ஸ் (பிறைவேற்) லிமிடெட்,சிற்றிஹோட்டலில்நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சுகாதாரப்பாரமரிப்பு நிறுவனமும் சர்வதேச சுகாதார விஞ்ஞான நிலைய பீடாதிபதியும் அமெரிக்க Stan Ford பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியருமான டாக்டர் நிகால் டி சில்வாவிடம் தொழில் சார் திட்டங்களுக்கும் தாதிமார் , மருந்தகவியலாளர்கள் , இயன்முறை மருத்துவர்கள்,சுகாதார முகாமையாளர் ஆகிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கற்கை நெறிகளுக்கான பட்டப்பின் படிப்புகள் பற்றியும் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

அவுஸ்திரேலிய நகரான சிட்னியில் தலைமையலுவலகத்தை கொண்டுள்ள குளோபல் எடியூகேசன் கம்பனியின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் அவுஸ்திரேலியா , நியூசிலாந்து , பிரிட்டன்,அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் 200க்கும் அதிகமான கல்வி வழங்குனர்களை பிரதிநிதிப்படுத்தும் Student World என்ற பத்தாயிரத்திற்கும் அதிகமான கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

மேலும் கனேடிய குடிவரவு ஆலோசனையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களான YLDபிரதிநிதிகளையும் சந்திக்கலாம் எனவும் இவை இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (எ-4)

# வவுனியா -கொழும்பு ரயில் விபத்தில் சகோதரர் இருவர் பலி

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளின் மூலம் பாடல் இணைப்பு கருவிகளை காதில் பொருத்தியவாறு புகையிரதப் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணனும் தங்கையும் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு பயணித்த தொடரூந்தில் மோதுண்டு பலியாகினர்.

இப் பரிதாபகரமான துயரச் சம்பவம் நேற்று அதிகாலை கொழும்புக்கு அருகில் ஹனுப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் மத்துகம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது இருவரின் சடலங்களும் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுது. (2)

# சட்டவிரோத கைத்தொலைபேசிகள் கட்டுநாயக்கவில் நேற்று பறிமுதல்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்த 2 ஆயிரத்து 873 கையடக்கத் தொலைபேசிகளை நேற்று சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

பேருவளையைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் வர்த்தகர்கள் குறித்த தொகையான கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமாக வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்துள்ளனர்.

இந்தக் கையடக்கத்தொலைபேசிகளின் மொத்தப் பெறுமதி 70 இலட்சம் இலங்கை ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

விமான நிலைய சுங்கப்பிரிவினர் விசாரணைகளின் பின்னர் குறித்த முஸ்லிம் வர்த்தகர் மூவருக்கும் தலா 83 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

# இலங்கைக்கு பொருட்கள் கடத்தல் இரகசிய கண்காணிப்பு தீவிரம்

(கொழும்பு)

இலங்கைக்கு மீண்டும் கடல் மார்க்கமாக மீனவர்கள் போர்வையில் கடத்தல் அதிகரித்துள்ளதால் இந்தியப் பாதுகாப்புப் பிரிவினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக இலங்கைக்கு கடல் அட்டை அதிகளவில் கடத்தப்படுவதும் பிடிபடுவதுமாக இருந்தது.

இராமேஸ்வரம் பகுதியில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் அட்டைகளை கடத்துவதற்காக பதப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த பெண்களை பொலிஸார் கைது செய்தனர்.

கடல் அட்டை மட்டுமின்றி மற்றப் பொருட்களும் கடல் அட்டை போர்வையில் கடத்தப்படலாம் எனப் பொலிஸாருக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கைக்கு மேற்கொள்ளும் கடத்தலை தடுக்க பொலிஸாருக்கு இரகசியப் பயிற்சி வழங்கப்பட்டுள்ள நிலையில் கடல் அட்டை பதப்படுத்தும் பணிக்கு செல்வோர் குறித்து கடலோர கிராமங்களில் பொலிஸார் இரகசிய விசாரணையை ஆரம்பித்துள்ளர். (ச-4-2)


# மணி விழா வாழ்த்து



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 11 ஆண்டுகள் விரிவுரையாளராக,பிரதி அதிபராகப் பணியாற்றி இன்று மணி விழாக் காண்கின்ற எங்கள் அன்பிற்கினிய ஆசான்

"பண்டிதர்", "சைவப்புலவர்", "கலைவாரிதி", "கலாநிதி"

**செல்லையா திருநாவுக்கரசு அவர்கள்**

B.A.,M.A.(தமிழ்), M.Ed.,Ph.D.,Dip.in Ed(Merit),Dip.in Management,S.L.P.S.2-I,S.L.E.A.S.-Class III

**கல்விச் சேவை விபரம்**

26.12.1985–23.08.1991–ஆசிரியர், வவுனியா மாதர்பணிக்கர் மகிழங்குளம் அ.த.க.பாடசாலை

24.08.1991–31.12.1992–ஆசிரியர்,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

01.01.1993–31.12.1994–சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,நல்லூர் கல்விக் கோட்டம்

01.01.1995–21.03.1997–ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

22.03.1999– இன்று வரை–விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

1994–1995–யாழ்.பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை இடைவரவு விரிவுரையாளர்

2001–இன்று வரை–தேசியக் கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை விரிவுரையாளர்

இன்று காலை எமது கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் மணிவிழாக் காணும் ஆசானை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

கலாசாலை சமூகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி வைஷ்ணவி விஜயகுமார்**

(யா/சென் பெனடிக் பாடசாலை)



5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகள் பெற்ற எமது *செல்வி வைஷ்ணவியை* பாராட்டி மகிழ்வதோடு, அவர் மென்மேலும் கல்வியில் முன்னேற்ற மடைந்து சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

அப்பப்பா, அப்பம்மா, அப்பா, அம்மா ,பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமி, சகோதரர்கள்.

36,அரசடி வீதி, 5ஆம் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2534)

# வன்னியில் கைவிடப்பட்டு இனங்காணப்பட்ட 416 மோட்டார் சைக்கிள்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது கைவிடப்பட்ட 416 மோட்டார் சைக்கிள்களினதும் 6 ஏனைய வாகனங்களினதும் உரிமையாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 22,23ஆம் திகதிகளில் மோட்டார் வாகனப் பகுதி பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட 416 மோட்டார் சைக்கிள்களினதும் ஏனைய வாகனங்கள் 6 இற்குமான உரிமையாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவ் வாகன உரிமையாளர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களை ஒப்படைத்து வாகனங்களை பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பரிசோதனையின் போது ஆயிரம் மோட்டார் சைக்கிள்களும் 30 ஏனைய வாகனங்களும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. இனம் காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்களின் இலக்கங்கள் வருமாறு,

TS-8109,JG-8190 ,NPHK-4065,NPGS-6555,GN-1159,GS-6643, NPJB-7913 , GN-1109,NPHQ-7458, NPHV-5847,GR-9100 ,GZ-9100,112-8726,NPGS-7429 ,NPHA-1589,GY-2235 ,NPHF-7627,WPJH-9904 ,NPMN-2930,NPHC-3913 ,NPHD-3531,EPHR-7275 ,NPMQ-1461,NPHJ-2900 ,NPMQ-6489 ,NPHK-3349 ,NPJY-5683,NWGC-6184,NPGW-5536 ,T14-6071,MI-6200 ,WPGW-6619 ,MF-1762 ,GX-9443.

JW-9718 ,NPHT-1405 ,NPGU-2311 ,NPJZ-7786 ,NPGS-6652 ,GA-9699 ,NPMU-3409 ,NP GU-1125 ,NPGO-2280 ,HS-9042 ,GU-0717 ,NPJA-2183 ,HT-5399 ,NPJI-0186 ,GN-6591 ,NPHK -3989 ,HK-7821 ,NPMN-9353 ,TS-8145 ,HA-8704,NPGS-6524 .

151-7098 , JY-8579 ,GS-6744 ,149-53 49, JF-5956 ,GM-0622 ,GC-8972,157-6497,GQ-8573, NPHY-9452 ,NPHK-7830, HK-2607 ,500-8302 ,156-33 23 ,134-4421 ,HG-0627,500 - 6796,

EPHO-9530 ,NPJI-5181 ,JZ-0744 ,WPGF-4549,NPHJ-7780 ,NPGZ-0096,GN-7441 ,NPGO-6284 ,EPGY-4313 ,GZ-4884 ,87-9228 ,109-6075,93-0127 ,500-7482,100-3088,138-3914 ,HD-3363 ,146-7016 , 152-1207.

GN-0245 ,113-7286 ,128-6805,500-9863,94-2117, 134-3746 ,HD-6559,153-7297 ,151-6929 ,136-1242 , 88-3281 ,133-8121 ,140-2464 ,125-2294 ,112-2998, 500-1743 ,502-0076 ,GG-2031 ,JY-6623 ,500-4801, 102-9486 ,HM-1087,134-1265, 153-4473 ,114-1995,146-5457 ,89-8456 ,146-6512 ,145-5428 .

148-1678, 500-5233,148-4128,128-1797,MT-8836,500-9762, 133-5719,148-7783,500-7152,156-0874, 153-2609,137-1311,146-5648,132-9529,129-5896,90-6330,500-9817,NPGF-9497,134-6858,152-3047,502-0628,502-0764,GN-6640, 500-7203,123-7106,158-2557,118-6205,500-4157;140-9009,145-3692,126-0853,147-6303,133-8612,142-8910,144-5839,146-0156, 156-5014,144-3630,NPHM-1105, 500-8248,157-4031, NPHK-4129.

130-988, NP HR-9671, 500-5362, 153-26 51, 502-0153, 137-5700, 500- 6430, 136-4853, 148-1161, 126-4368, 115-8779, 502-0979, 144-6786, 139-1936, 500-8634, 145-3122, 144-32 59, 118-6787, 106-1052, 500-4058,156-6387,127-4839,GO-3533, 117-1230.

142-3073, 97-1322, 130-7001,500-0748, WPJG-0688, 147-3150, 145-9190, 141-7289, 148-2279, NPJZ-4549, 500-2300, WP GZ-0747,140-1278,128-64 85, 154-1325, 142-0242, 500-6051, WPGY-6694,NPGQ-2564, 500-3234, 502-0895, 129-8668, 121-4839, 150-6264, 88 SRI 4302, 127-5228.

NPGZ-4859, 500-0610, 146-7131, 144- 5904, 133-6371, NPJI-9043, NPGC-3116, 144-6445, NPGD- 5625, 143-8996, 146-2228, 148-6090, WPGJ-6689, 137-4406, 120-6824, 148-4412, 136-8678, 500-4997, 138-0852, 500-4675, 159-9308, 140-5154, 140-9645, 500-2311, GN-9753, GR-9046, 157-3777, MJ-3831

50-2186 ,144-0027 ,159-7924 ,500-6978 ,116-6812, 137-4425 ,131-3225,125-6796,155-4152,156-8452 , 1 44-8834 ,HF-7345 ,146-7287 , 112-5997 ,144-9872 ,108-2201 ,GA-7645 ,157-8625, 125-0983.

500-9073 ,GL-94 11 ,MD-1950 ,JZ-3017 ,MF-0040 ,UB-0178 ,HA-6024, NPJP-2854 ,MX-3489, MX-5538,HR-7395,JY-8669, MG-8940,HZ-2862,GQ-9324.

NPGO-6485,HS-0680,157-6271 ,GS-0495,133-8668 ,152-2584,HG-1319, GI-6558 ,148-8624,106-0470,115-8644 ,133-1103 , NPHK-4113,HG-0718,HT-5374 ,140-9126 ,JG-3719 ,152-7362 ,NPJF-5208 ,152-0161, MH-4097,HQ-4369,MX-3479,NPHX-3407,113-5098,ME-6514 ,MO-3365.

GN-1190 ,MF -3458 , MA-2697 ,MS-6233 ,139-3225 ,WPJZ-8359,NPHI-6609, 502-0518 ,152-5867 ,140-9295 ,159-0351 ,GK -6625 , 144-7481,500-9258 ,NPHG-0683 ,NPHX-3323 ,NPHM-0985 ,136-8609,NPJP-0012, NPHE-7323 ,160-3843, HX-1970,NPJY-8592,NPGN-3211,500-9302.

153-6079 ,NPHC-3621, NPGM-0614 ,JK-7244, NPMQ-8310 ,146-1773 ,JB-7224 ,NPHW-2608 ,GT-4633 ,HY-9554,NPHF-4876,MX-2153, ME-6085,MD-3363.

MD-28 83 ,MQ-6473,MC-6798, HT-1411 ,MQ-4047 ,JA-5664,GN-4177,HK-3999, HC-3611 , MW-1781 ,EO-5722, JD-4040,HR-9623 ,HW-2109, 131- 2516.UB-0362 ,MM-3874 , MG- 4706 ,MX-3233,GH-1198

MO-3559,JZ-6102,HE-7316,MF-5741,HY-4939, MD-7894,HO-5283,JC-9945,MQ-4511,MC-9738,500-9036,TL-2654,HG-0691, HG-0692,GN-1150,MG-4979, 83-6748.

NPGO-6068, HF-0008, JR-5356,NPGW-5768,110-7529,GN-6575, JJ-4503, 128-2613,UB-04 51,GQ-0928,MB-4410,MU-0249,GP-8495.

JB-1939,HX-4902,500-2433,MI-0188,HI-6707,MM-4076,JT-9654, GZ-8834,JO-2676,JD-4155,MD-2225,NPHI-4939, NPJQ-4024,HI-7878, 143-2163,153-9520, HM-1128, NCGG-0348,131-5510,HY-2740,111-2746,109-6431, NPHC-3511,NPHO-4796, NPHM-0968,NPGQ-4454

**ஏனைய வாகனங்கள்**

GN-2496,JJ-9001,RA-1049, LD-9943,RA-2690,GR-6959.

(எ)


# VACANCY
## ANNOUCEMENT

In response to the official request of the Government of the Democratic Socialist Republic of Sri Lanka, a Japan International Cooperation Agency (JICA) team is going to implement "the Project for Development Planning for the Rapid Promotion of Reconstruction and Development in Jaffna District", or PDP Jaffna in short. To carry out the tasks of the project, the JICA team now invites applicants for local consultant positions specified below.

**POST TITLE :**

**Community Development Specialist ( 2 people )**

**General Qualifications:**

Applicants for the positions above must have at least the following qualifications.

(a) Proven ability to undertake research, analytical and evaluation work on well-defined tasks, collect and organize required data and information, and apply appropriate computer skills in analyzing data.

(b) Excellent command of English in speaking and writing – capable to produce well-organized reports.

(c) Excellent command of Tamil language at least in speaking. Originating from or resident in Jaffna District is an advantage.

(d) Bachelor's degree or above in the area of expertise or related areas, preferably from a renowned university. A master's or more advanced degree is an advantage.

(e) Work experience with international donor organizations, bilateral development agencies, and projects supported by these organizations/agencies is an advantage.

**Qualification of Community Development Specialist:**

(a) Minimum of eight (8) years working experience in the area of community development

(b) Experience in conducting survey on community profiles and to scrutinize the needs

(c) Practical skills to implement livelihood development activities, such as business development, marketing development, and other income generating activities with community participation, especially women's organizations

(e) Minimum three (3) years working experience in Tamil speaking areas.

**Scope of Work:**

(a) Collecting basic data and information on communities and livelihood development activities

(b) Facilitating the process of planning and implementation of pilot activities for livelihood development with community participation

(c) Formulating and strengthening CBOs

(d) Analyzing the above tasks and producing well-organized reports

(e) Contributing to any other activities required for the Project.

**Closing Date**
**8th October 2010**

**How to Apply:**

**To apply, please send your CV to the following email address by e-mail , or post the following address by post.**

SPEED MANAGEMENT SERVICE (PVT.) LTD.
No 36/2, Rasavin Thoddam, Jaffna
Speedms2010@gmail.com

# இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சமாதான முயற்சி தடைப்பட்டமைக்கான காரணத்தை கண்டறிய விசாரணைக்குழு!

## நோர்வேயினால் அமைப்பு

(கொழும்பு)

**இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சமாதான முனைப்புக்கள் ஏன் தடைப்பட்டதென்பதனை கண்டறியும் நோக்கில் விசாரணைகள் நடத்தப்படும் என நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டொல் ஸ்டன்பெர்க்தெரிவித்துள்ளார்.**

நோர்வேயினால் மத்தியஸ்தம் வகிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வியடைந்ததற்கான காரணங்களை கண்டறியும் நோக்கில் விரிவான விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் தனியார் நிறுவனமொன்று இந்த விசாரணைகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையை 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரத்து செய்து யுத்தத்தை முன்னெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா மற்றும் சீனாவுடனான நோர்வேயின் உறவு, புலம்பெயர் தமிழர்களுடன் நோர்வேயின் உறவு, 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் தொடக்கம் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையிலான இலங்கையின் அரசியல் சூழ்நிலை ,பொது அமைப்புக்களுடனான உறவு ,முஸ்லிம் மற்றும் ஊடகங்களுடனான உறவு, யுத்த நிறுத்த உடன்படிக்கையின் குறைபாடுகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வரையறைகள் ஆகியன குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளன.

1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நோர்வே அரசாங்கம் இலங்கைக்காக 2.5 பில்லியன் நோர்வே க்ரோன்கள் செலவிடப்பட்டுள்ளது.

இதில் 100 மில்லியன் நோர்வே க்ரோன்கள் சமாதான முனைப்புக்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

யுத்த காலப்பகுதியில் இராணுவத்தினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளித்துச் செயற்பட்டனரா என்பது குறித்தும் இந்த விசாரணைகளின் போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

இலங்கை அரசாங்க அதிகாரிகள், புலம்பெயர் தமிழர்கள், சர்வதேச அமைப்புக்கள், ஐக்கிய நாடுகளின் உயரதிகாரிகள் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

யுத்தம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்துள்ள அதே வேளை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4-2)

# இலத்திரனியல் கழிவுகளை விற்பதன் மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும்

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

இலத்திரனியல் கழிவுகளை விற்பனை செய்வதன் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இலத்திரனியல் சாதன இறக்குமதியாளர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிகள் , கணனிகள், குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் , கழிவுகளை அகற்றும் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலத்திரனியல் கழிவுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கழிவுகளினால் இலங்கை பாரிய சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கழிவுகளை அகற்றுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை இறக்குமதியாளர்களுக்கு விசேட அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கவுள்ளது.

இலத்திரனியல் கழிவுகளை மீள் சுழற்சி செய்து பயன்படுத்தும் நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்களையும் இறக்குமதியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கழிவுகளை சில பெற்றோர் பிள்ளைகளுக்கு விளையாடக் கொடுப்பதாகவும் இவ்வாறான கழிவுகளில் மனித உடலுக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய பல இரசாயனப் பொருட்கள் காணப்படுவதாகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் டாக்டர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கழிவுகளை விற்பனை செய்வதன் மூலம் மக்களும் வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-4-2)

# பிரபா கணேசனின் உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு தீர்மானம்!

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினர் பிரபா கணேசனின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு கட்சியின் தலைவர் மனோ கணேசன் தீர்மானித்துள்ளார்.

அண்மையில் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட பிரபா கணேசனின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏன் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்யக் கூடாது என்பதனை விளக்குவதற்கு பிரபா கணேசனுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் குமாரகுருபரன் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவிற்கு செல்வதற்கு முன்னர் அவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், கட்சி உறுப்புரிமையை ஏன் இரத்து செய்யக் கூடாது என்பதனை பிரபா கணேசன் விளக்க வேண்டுமெனவும இது தொடர்பான விளக்கக் கடிதமொன்று நேற்றைய தினம் பிரபா கணேசனுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் நிதிச் செயலாளர் ஆகிய பதவிகளை பிரபா கணேசன் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4-2)



இந்திய பிரதிநிதிகளுக்கும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும் இடையில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பில் யாழ். அரச அதிபர் மற்றும் இந்திய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் எஸ்.கே. கம்பீர் ஆகியோர் உரையாற்றுவதையும்,யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இந்தியப் பிரதிநிதிகள் குழுவினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு

# அதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த போக்குவரத்து அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பஸ்சேவையை மேம்படுத்துமாறு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர்களுடன் இணைந்து இரண்டு மாகாணங்களுக்கும் அதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய கொழும்பில் இருந்து கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ,திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் வடக்கு பஸ் டிப்போக்களில் பழுதடைந்த நிலையில் காணப்படும் பஸ்களை திருத்தி மீளவும் சேவையில் ஈடுபடுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவாக தெரிவிக்கப்படுகிறது.

(எ-4-2)

# ஆஸி.அகதிகளின் போராட்ட அச்சம்

# கிறிஸ்மஸ்தீவுக்கு விரைந்தார் அமைச்சர்

அவுஸ்திரேலிய முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள சட்டவிரேத குடியேற்றவாசிகள் போராட்டங்களில் இறங்கலாம் என்று அதிகாரிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

சிட்னியில் உள்ள வில்லாவுட் தடுப்பு முகாமில் கடந்த 20ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

முகாமில் இரண்டு மாடிக்கட்டட கூரையில் ஏறியிருந்த 9 இலங்கைத் தமிழர்களும் கீழே இறங்க சம்மதித்தனர்.

அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணைய அதிகாரிகள் அவர்களின் அடைக்கலக் கோரிக்கை தொடர்பாக பரிசீலிக்க தயாராக இருப்பதாக வாக்குறுதி கொடுத்ததையடுத்தே அவர்கள் 9 பேரும் கீழே இறங்கச் சம்மதித்தனர்.

அதேவேளை கூரை மீது நின்று போராட்டம் நடத்தியவர்களுக்கு தாம் எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை என்று அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்போவன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்தப் போராட்டம் அவுஸ்திரேலியாவில் ஏனைய முகாம்களில் உள்ள அகதிகளுக்கு முன்னுதாரணமாக அமையலாம் என்று அவர்களும் இது போன்ற போராட்டங்களில் இறங்கலாம் என்றும் அவுஸ்திரேலிய அதிகாரிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

இதையடுத்து அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்போவன் கிறிஸ்மஸ் தீவு முகாமுக்குச் சென்றுள்ளார். கடந்த பல மாதங்களாகவே கொள்ளவை நெருங்கியுள்ள கிறிஸ்மஸ் தீவு முகாமில் உள்ள அகதிகளுக்கான வசதிகள் குறித்து ஆய்வு செய்யவே அவர் அங்கு சென்றுள்ளார்.

குடிவரவு அமைச்சராக அண்மையில் பொறுப்பேற்ற பின்னர் அவர் கிறிஸ்மஸ் தீவு முகாமுக்கு மேற்கொள்ளும் முதலாவது பயணம் இதுஎன்பதும்குறிப்பிடத்தக்கது. (ச-4-2)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துருக்கி ஜனாதிபதியுடன் பேச்சு

(ஜெனிவா)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல்லிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள இரு நாட்டுத் தலைவர்களும் இந்தச் சந்திப்பினை மேற்கொண்டுள்ளனர்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டமை குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துருக்கிக்கு விஜயம் செய்த போது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை அமுலாக்குவது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(எ-4-2)

# முன்னாள் சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருவார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் முன் னாள் சமாதானப் பிரதிநிதியும் சுற்றாடல் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை எவ்வாறு மேலும் வலுப்படுத்திக் கொள்வது என்பது தொடர்பில் இந்த விஜயத்தின் போது ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வே பிரதமர் ஜன்ஸ்ஸ்டொல்ஸ்டன் பெர்க்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்பி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதென நோர்வே பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் நோர்வே ஆர்வமாகக் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் நோர்வே இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு அரசியல் தலைவர்களினால் தீர்வு முன்வைக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (4-2)

# 24.09.2010


## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்

- *0622* - முகமது நபி மக்காவில் இருந்து மதினாவுக்கு இடம்பெயர்ந்தார் (ஹிஜ்ரா).
- *1664* - நெதர்லாந்து நியூ ஆம்ஸ்டர்டாமை இங்கிலாந்துக்குக் கொடுத்தது.
- *1799* - கட்டபொம்மனும் இன்னும் 6 பேரும் புதுக்கோட்டை அரசன் விஜயரகுநாத தொண்டைமானால் கைது செய்யப்பட்டுப் பின்னர் செப். 29 இல் ஆங்கிலேயரிடம் ஒப் படைக்கப்பட்டனர்.
- *1840* - இலங்கை வங்கி நிறுவப்பட்டது.
- *1841* - புருணை சுல்தான் சரவாகக் மாநிலத்தை பிரித்தானியாவுக்குக் கையளித்தான்.
- *1898* - யாழ்ப்பாணம், இணுவிலில் பெண்களுக்கான மக்லியோட் மருத்துவமனையை அமெரிக்க மிசன் நிறுவியது.
- *1948* - ஹொண்டா நிறுவனம் அமைக்கப்பட்டது.
- *1973* - கினி - பிசாவு போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- *1990* - சனிக் கோளில் பெரும் வெண்புள்ளி ஒன்று தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது.
- *1994* - மியான்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்க்க மக்களாட்சிக்கான தேசிய அமைப்பை ஆங்சான்சூ கீ உருவாக்கினார்.

### பிறப்பு

- *1902* - ருஹொல்லா கொமெய்னி பிறந்த தினம் (ஈரானிய அரசியல்வாதி) (இ.1989)


**தென்னிந்திய பிரபல நடிகை பத்மினி 2006ஆம் ஆண்டு காலமானார்.(பி.1932)**



# முப்பெரும் (கசப்பு) விழா! அழகிரியை ஒதுக்கிய திமுக

தொண்டர்களுக்கு எப்படியோ... தி.மு.க.தலைவர் கருணாநிதிக்கு செப்டெம்பர் மாதத்தில் வருகிற முப்பெரும் விழா எப்போதுமே களிப்பூட்டும் திருவிழா!

கட்சியைத் தொடங்கிய இதய தெய்வம் அண்ணா... அரசியல் குருநாதர் பெரியார் ஆகியோரின்



பிறந்த நாட்களோடு... கொட்டும் மழையில் சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் தி.மு.க. இயக்கத்தைத் துவக்கியதும் இந்த மாதத்தில்தான். கருணாநிதியின் நெஞ்சத்து நினைவுகள் அத்தனையும் இந்த மூன்று பெரும் நிகழ்வுகளில் சிலிர்ப்புக்கொண்டு எழுந்து நிற்க... இந்த முப்பெரும் விழாவில், வருடாவருடம் பேருவகையோடு தொண்டர்களை சந்திப்பார்! இந்த ஆண்டு அது நாகர்கோவிலில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது.

“சிலிர்ப்பு விழாவே தலைவரின் “கடுப்பு” விழாவாக மாறிப்போனது. தன் மனக் கிலேசங்களை மறைத்துக்



கொண்டுதான் அவர் மேடையில் வீற்றிருந்தார்...” என்று முணுமுணுக்கிறார்கள் கட்சியின் சீனியர்கள் சிலர். அழைப்பிதழ் அச்சடித்ததுமே சஞ்சலங்கள் தொடங்கியதாம்.

நடக்கும் இடம் நாகர்கோவில் என்பதால் அமைச்சர் சுரேஷ்ராஜன் வரவேற்புரையாற்ற... தலைவர் கருணாநிதி, பொதுச் செயலாளர் அன்பழகன், பொருளாளர் ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் ஆற்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர்களான துரைமுருகன், பரிதிஇளம்வழுதி, சற்குணபாண்டியன் ஆகிய நிர்வாகிகளின் பெயர்கள் மட்டுமே அதில் இடம் பெற்றிருந்தன.

மத்திய அமைச்சரும், கழகத்தின் தென் மண்டலப் பொறுப்பாளருமான மு.க.அழகிரியின் உயிர் நண்பர்களுக்கோ... தங்கள் அன்பு அண்ணனின் பெயரை அழைப்பிதழில் காணாததால்... அதிர்ச்சி. “வருகிற சட்டமன்றத் தேர்தலில் தென் மாவட்டங்களின் அத்தனை தொகுதிகளிலும் தி.மு.க.மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சிந்தாமல் சிதறாமல் ஜெயிக்கவைப்பதற்கு அண்ணன் மெனக்கெட்டு வியூகங்கள் வகுக்கும் வேளையில்... அழைப்பிதழில் கூட அவர் பெயர் இல்லாமல், தெற்கே இந்த விழா தேவையா?” என்று இந்த உயிர் நண்பர்கள் கொந்தளிக்க... அதில் நியாயம் இருப்பதாக அழகிரியும் நினைத்தாராம்.

## தோற்றுப் போன சமாதானம் எரிமலையான கருணாநிதி


இதற்கு சமாதானம் பேசிய சிலர், “கூட்டம் நடத்துவது தி.மு.க.தலைமைக் கழகம். எனவே, தலைமைக் கழகத்தின் நிர்வாகிகள் பெயரை மட்டும்தான் போட முடியும். தென் மண்டல அமைப்புச் செயலாளர் என்ற வகையில் அழகிரி பெயரைப் போட்டால் ... மாநில அமைப்புச் செயலாளர்களாக டி.கே.எஸ்.இளங்கோவன், கல்யாண சுந்தரம் ஆகிய இருவர் பெயரை “ஓவர்லுக்” செய்வதாக ஆகாதா?” என்று விதிமுறை -நடைமுறை பேசிப் பார்த்தார்களாம்.

“தேர்தல் காலத்தில், எதிர்க் கட்சிகளின் ஒட்டுமொத்த விமர்சனங்களையும் சட்டை பண்ணாமல், பெரிய அளவில் ரிஸ்க் எடுத்து, இதனை இன்னார் செய்தால் சரிவரும் என்று முடுக்கிவிட்டு வேலை பார்ப்பதற்கு மட்டும் அண்ணன் வேணும். கூட்டம் நடத்தும்போது, விழாக்கோலாகலத்துக்கு அவர் வேண்டாமா? அண்ணன் இந்த நிகழ்ச்சிக்கு வர மாட்டார்...” என்று சில குரல்கள் கிளம்பின.

விவகாரம் மு.க.ஸ்டாலின் காதுக்குப் போக ... விழாவை நடத்தும் பிஸியில் இருந்த சுரேஷ்ராஜனை தொடர்புகொண்ட அவர், “அண்ணனை விழாவுக்குக் கூப்பிடுங்க. முக்கியத்துவம் கொடுத்துப் பேசுங்க!” என்று உத்தரவு போட்டாராம். சுரேஷ்ராஜனும் மதுரையில் இருந்த அழகிரியிடம் பேச, “எனக்கு அன்னிக்கு டில்லியில் வேலை இருக்கு. என் துறை தொடர்பான கூட்டம். அதனால், என்னால் வர முடியாது!” என்று நயமாகவே சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்ததாகச் சொல்லப்படுகிறது.


‘விடயம் சீரியஸ்’என்று மறுபடி சென்னைக்குத் தகவல் எட்ட ... அடுத்த முயற்சி தொடங்கியதாம். தினப் பத்திரிகை விளம்பரங்களில் அழகிரி பெயரையும் இணைத்து ஈடு கட்டுவதன் மூலம், அவரை சாந்தப்படுத்தலாம் என்று கட்சி முக்கியஸ்தர்கள் சொல்ல... தலை அசைத்தாராம் கருணாநிதி.

அதைத் தொடர்ந்து முப்பெரும் விழா விளம்பரங்களில், தென் மண்டல அமைப்புச் செயலாளர் மு.க.அழகிரி, கனிமொழி எம்.பி., திருமதி குஷ்பு சுந்தர் ஆகிய மூன்று பெயர்கள் இணைக்கப்பட்டன. யார் சொல்லி மற்ற இரு பெயர்கள் புதிதாக இணைந்ததோ... அதுவே எரிமலைக்குள் எண்ணெய் ஊற்றிவிட்டது என்கிறார்கள்.“இது அண்ணனுக்கு முக்கியத்துவம் தருவதற்கு போட்ட விளம்பரம் மாதிரி தெரியலை. சந்தடி சாக்கில் குஷ்பு பெயரைச் சேர்க்கக் காத்திருந்த காரியமாக இருக்கிறது!” என்று அழகிரியின் ஆதரவுப் படையினர் அதிர்ந்து பேசத் தொடங்கினார்களாம்



“அண்ணன் பெயரை இணைத்து புது அழைப்பிதழே அடித்தாலும்... எத்தனை விளம்பரங்கள் கொடுத்தாலும் அவர் அப்செட் ஆனது ஆனதுதான்!” என்று மீடியா நண்பர்களிடம் மனவோட்டத்தைக் கசியவிட்டனர்.

குஷ்புவின் பெயர் இணைக்கப்பட்டது, கனிமொழி வட்டாரத்திலும் அதிர்வலை பரப்பியதாம்! அதே சமயம், அழகிரியை இந்த விழாவுக்கு எப்படியும் வர வழைத்து ... அவருக்குத்தெற்கே உள்ள தனி முக்கியத் துவத்தை விழாமேடை யில் வெளிச் சம் போட்டு ... சில விடயங்களை உணர்த்த நினைத்ததாம் கனிமொழி தரப்பு! இதுபற்றிச் சொல்பவர்கள், “முப்பெரும் விழா ஜொலிப்பு செப்டெம்பர் 20 திகதி என்றால்... அதற்கு முந்தைய தினம் சுரேஷ்ராஜனை தொடர்புகொண்டு கனிமொழி தரப்பில் பேசினார்கள்.



விழா மேடையில்...

‘நீங்கள் மறுபடி அழகிரி அண்ணனைக் கூப்பிடுங்கள். அவர் மதுரையில்தான் இருக்கிறார். கட்டாயம் நாகர்கோவில் கூட்டத்துக்கு வருவார்’ என்று கூறினார்கள்.

அவர், தனக்கும் அழகிரிக்கும் ஏற்கனவே நடந்த தொலைபேசி உரையாடலைச் சொல்லி, ‘வர மாட்டேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். மறுபடி நானே எப்படி அழைக்க முடியும்?’ என்று கேட்டாராம். நீங்கள் நேரில் போய்

14ஆம் பக்கம் பார்க்க...

ஜூனியர் விகடன்


# ஈழத்தவர் வரலாறு 45

## 7.வன்னிச் சிற்றரசுகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

1697 ஆம் ஆண்டும் வன்னிப்பிரதேசம் ஆறு வன்னிப்பிரதேசங்களாக இருந்துள்ளது. பனங்காமம் - பரந்தன்வெளி, பேகன் விளாங்குளம்-புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை-மேல்பற்று, கருகாவற்பற்று-புதுக்குடியிருப்பு, தென்ன மரவாடி என்பன அவையாம். இவற்றின் வன்னிமைகளாக முறையே டொன்பிலிப் நல்ல மாப்பாணன், இலங்கை நாராயணன், பெரிய மெயினார் உடையார், டொன்தியோகு புவி நல்ல மாப்பாணன், அம்பலவாணவன்னியன், சேதுகாவல மாப்பாணன் என்போர் விளங்கினர். 1697 இல் புதுக்குடியிருப்பு பேகன் விளாங்குளத்தோடும், கரிக்கட்டு மூலை மேல் பற்றோடும் சேர்க்கப்பட்டு முள்ளியவளை தனியாக அமைக்கப்பட்டிருந்தது.


யாழ்ப்பாண ஒல்லாந்தர் கோட்டை

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் ஆட்சியாளருடன் வன்னித்தலைவர்கள் முரண்பட்டே நடந்து கொண்டனர். ஒழுங்காகத் திறை செலுத்திவரவில்லை. 1680 - ஆம் ஆண்டு 313 யானைகள் திறைப்பாக்கியாக விருந்தன. இத்திறையை அறவிடமுடியாத நிலையில் ஒல்லாந்தர் நீக்கியபோதும், 1696 இல் 70 யானைகள் மீண்டுந் திறைப்பாக்கியாகவிருந்தன. யாழ்ப்பாணக் கம்மந்தோரின் அதிகாரியாகவிருந்த ஹென்றிக் சுவாதிக்குருன் (1694 - 1697) நல்ல மாப்பாணன், நிச்செய சேனாதிராயன், இலங்கை நாராயணன் ஆகிய மூன்று வன்னியருடன் பிணக்குப்பட்டிருந்தான்.

இந்த வன்னியர்கள் யாழ்பபாணத்துக்கு வருகைதரும் போது மேளதாளம் முதலான வரிசைகளோடு வரவேற்கப்படவில்லை என்பது இப்பிணக்கிற்குரிய காரணமாகும். 'இந்த வன்னியர்கள் பிறப்பால் கம்பனியின் பிரஜைகளாகவிருந்தும், சாதியிற் பொதுவான வேளாளராகவிருந்தும், கால கதியில் மிகவுஞ் செருக்குற்று 'வன்னியன்' என்னும் பதவி மிகவும் மேம்பாடுடையதொன்றென நினைத்திருக்கிறார்கள். 'வன்னியன்' என்னும் பதவி கம்பனியரால் அளிக்கப்பட்டதாயிருந்தும், கம்பனியையாவது அதன் மேலுத்தியோகத்தரையாவது கனம்பண்ண வேண்டுமென நினைக்கின்றாரில்லை. கம்பனி உத்தியோகத்தர்முன் சென்று தக்க மரியாதையுடன் பணிவுகாட்டுவது தங்களுக்கு வேண்டியதொன்றல்லவெனவுங் கருதுகின்றார்கள் என ஹென்றிக் சுவாதிக்குரன் தனது அறிக்கையில் எழுதியுள்ளார். 1715 இல் ஒல்லாந்தரால் புவிநல்லமாப்பாணனும் நிச்செய சேனாதிராயனும் கைது செய்யப்பட்டனர். 1716 இல் வன்னிப் பிரதேசம் நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தோணி குலசேகரம், கந்தப்பு மயிலாத்தை, சேந்தையினார் வாரி, கந்தப்பர் சிலம்பியனார் ஆகிய நால்வர் வன்னிமைகளாக நியமிக்கப்பட்டனர்.

1766 இல் பனங்காமத்திற்கு கதிரிநாச்சி வன்னிச்சி தலைவியாக இருந்தாள். பனங்காமத்து வன்னியனான நிச்செயசேனாதிராயன் இறக்க அவனது மகளான கதிரிநாச்சி வன்னிச்சி அரசபொறுப்பேற்றாள் . இவள் பராயமற்ற பிள்ளையாக இருந்ததால் இலகுநாதநல்லநாச்சி பராமரிப்புக்காரியாக நியமிக்கப்பட்டிருந்தாள். கருநாவற்பற்று, கருக்கட்டுமூலை, முள்ளியவளை, மேல்பற்று எனும் நான்கு வன்னிப் பிரிவுகளுக்கும் புவிநல்லமாப்பாணன் என்பவனே வன்னிமையாக விளங்கினான். தென்னமரவாடிக்கு சேதுகாவல மாப்பாணன் வன்னிமையாக இருந்தான்.

ஒல்லாந்தர் வன்னியரின் ஆட்சியதிகாரத்தைக் குறைக்க எண்ணி கப்பித்தான் நாகெல் என்பவனை வன்னியதிகாரியாக நியமித்த போது, பனங்காமவன்னியனான நல்லமாப்பாணனின் மருமக்களான நல்லைநாச்சி, சிதம்பரநாச்சி (சின்னநாச்சி) எனுமிரு வன்னிச்சிகள் கலகம் செய்ததாகத் தெரிகிறது. நாகெல்லுக்கு எதிராக மக்களைத்திரட்டிப் போராடினர். அதில் தோல்விகண்டதால் நல்லைநாச்சியும் அவளது கணவரும் வண்ணார் பண்ணைக்கு ஓடி அங்கு மரணமடையும் வரை கரந்துறைந்தனர். சின்னநாச்சி முல்லைதீவுக்கோடி அங்கு வாழ்ந்திருந்தாள்.

1790 ஆம் ஆண்டு பனங்காமத்திற்கு நல்லமாப்பாணன் என்ற வன்னியன் தலைவனாக விளங்கினான் என அறியப்படுகிறது. இவன் மீது குற்றம் சுமத்திய ஒல்லாந்த கம்மாந்தர் இவனைக் கைதுசெய்து கொழும்புக்குக் கொண்டு சென்று, பன்னீராயிரம் றிக்ஸ் டொலர்கள குற்றப்பணமாகக் கட்டும்படி பணித்ததோடு, அது கட்டும்வரை சிறையிலிருக்குமாறும் பணித்தனர். நல்ல மாப்பாணனின் மனைவியான நல்லை நாச்சியார் வண்ணார்பண்ணைக்குச் சென்று வைத்திலிங்கம் செட்டியாரிடம் அடைக்கலம் புகுந்தாள்.

தனது கணவர் விடுதலையாகும்வரை குளித்தலைக் கைவிட்டதுடன் ஒரு நேர உணவுடன் விரதமிருந்தாள். வைத்திலிங்கச் செட்டியார் ஒல்லாந்தராட்சியில் மிகுந்த செல்வாக்குடையவராக இருந்தமையால், கொழும்பு சென்று நல்லமாப்பாணனை விடுவித்து வந்தார். அதற்குப் பிரதியாக வைத்திலிங்கச் செட்டியார் வண்ணைச்சிவன் கோயிலைக் கட்டியபோது, அக்கோயில் கட்டமைப்புக்குத்தேவையான மரங்களை வழங்கியதோடு, தேராங்கண்டல் கிராமத்தையும் கோயில் தொண்டு இடையறாது நடைபெற வழங்கினர். (தொடரும்)

## தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கிளைகளை உலகளாவிய ரீதியில் அமைக்கத் திட்டம்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உலகளாவிய ரீதியில் கிளைகளை நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பா உள்ளிட்ட தமிழ்ப் புலம்பெயர் மக்கள் வாழும் சகல நாடுகளிலும் கிளைகள் நிறுவப் பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக உருவாக்கியதன் பின்னர், கிளைகளை நிறும் பணி ஆரம்பமாகும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள தேர்தல் ஆணையாளர் நாடு திரும்பும் வரையில் தாம் காத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் கிளைகளை நிறுவுவதற்கு உலகப் புலம்பெயர் தமிழர்களிடம் ஏற்கனவே உதவிகள் கோரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-2-4)

## நோர்வேயின் சுற்றாடல் அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானப் பிரதிநிதியும் சுற்றாடல் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை எவ்வாறு மேலும் வலுப்படுத்திக் கொள் வது என்பது தொடர்பில் இந்த விஜயத்தின் போது ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராபுக்வோ நநோர்வே பிரமதர் ஜன்ஸ் ஸ்டொல்ஸ்டன் பெர்க்கை சந்தித்து பேச்சவார்ததை நடத்தியுள்ளார்.


நாட்டை மீளக் கட்டியெழுப்பி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய மிகவும் அவசியமானதென நோர்வே பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் நோர்வே ஆர்வமாகக் காணப்படுவுதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் நோர்வே ஆர்வமாகக் காணப்படுவுதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் நோர்வே இலங்கையினள் சமாதான முன்னெடுப்புக்களில் காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபுக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு அரசியல் தலைவர்களினால் தீஹ்வு முன்வைக்கபடவேண்டுமென அவர் வலியுறுத்திள்ளார். (4-2)




தென்மராட்சி கிழக்கு லயன் கழகத்தின் காரியாலயத் திறப்பு விழாவும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்தில் நுளம்பு வலைகளை குடாநாட்டில் விநியோகிக்கும் ஆரம்ப நடவடிக்கையும் அண்மையில் நடைபெற்றன.

இதில் எம்.ஜே.எப். 306.B1 இன் ஆளுநர் லயன் எஸ். ஜெயவச்சலன் மற்றும் பாரியார் லயன் சீமாட்டி சயந்தினி ஆகியோர் இணைந்து காரியாலயத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் அருகில் கழக தலைவர் லயன் எஸ். தேவகுமார் , பிராந்திய வலயத் தலைவர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் ஆகியோர் நிற்பதையும் வலயத் தலைவர் லயன் பி.செல்லத்துரை பயனாளி ஒருவருக்கு நுளம்பு வலையை கொடுத்து செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# சிறுகுறிஞ்சாவின் மருத்துவப் பயன்பாடுகளும் Biotec நிறுவனத்தின் செயற்பாடுகளும்

நீரிழிவு நோயானது உலகம் முழுவதிலும் அபாயகரமான ஆரோக்கிய பிரச்சினையாகவுள்ளது. இதனை சிகிச்சை மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற போதிலும் இன்று வரையில் நீரிழிவு நோயானது பூரணமாகக் குணமடைந்தததாக அறியப்படவில்லை. ஆங்கில மருத்துவ முறைகளிலும் பார்க்க பாரம்பரிய மருத்துவ முறைமூலம் நீரிழிவிற்கு சிகிச்சையளிப்பது சிறந்தது. ஏனெனில் ஆங்கில மருத்துவ முறைகளில் பக்கவிளைவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

மூலிகைகளிலிருந்து நீரிழிவைக் கட்டுப்படுத்துகின்ற எண்ணற்ற உயிர்செயல்திறனுள்ள பதார்த்தங்கள் இரசாயன மருத்துவ ஆராய்ச்சிகளமூலம்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிறுகுறிஞ்சா அல்லது சர்க்கரைக் கொல்லி என்றழைக்கப்படும் இத்தாவரமானது நீரிழிவு நோய்க்கு மிகவும் பயனுள்ளதாகும். இதன் விஞ்ஞானப் பெயர் Gymnems sylvestre நீரிழிவு நோயுள்ள ஒவ்வொருவரினதும் வீட்டில் வளர்க்கப்பட வேண்டிய தாவரமாகும். இதனையறியாதவர் இருப்பது அரிது.



படம்:-1சிறு குறிஞ்சா

இத்தாவரமானது தென் மற்றும் மத்திய இந்திய உஷ்ணப் பிரதேச காடுகள், ஆபிரிக்கா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் பொதுவாக தாழ்நிலங்களிலும் உலர் மற்றும் இடைவெப்ப வலயங்களிலும் காணப்படுகின்றது.

சிறுகுறிஞ்சா கொண்டிருக்கும் முதன்மையான இரசாயனப் பதார்த்தங்கள் ஜிம்னிமிக் அமிலம் (Gymnemic acid) , தாத்தாரிக் அமிலம் (tartaric acid) , குமாறின் (Gurmarin), கல்சியம் ஒக்சிலேட் (Calcum oxalate), குளுக்கோஸ் (Gurmarin), சிக்மஸ்ரோல் (Stigmasterol), பீற்றயன் (betaine) மற்றும் பல ஆகும்.


சிறுகுறிஞ்சா இலையில் குளுக்கோஸைக் கட்டுப்படுத்தும் காரணியுடன் புரோவிற்றமின் - A (β - கரொட்டீன்) உம், விற்றமின் Cயும்,இரும்பு கல்சியம், குளுக்கோஸ் கலத்தினுள் உட்செல்வதற்கு அவசியமான குரோமியம், சாதாரண நொதியத் தொழிற்பாடு, வளர்ச்சி, உடல் ஆரோக்கியத்தை பேணுவதற்கு அவசியமான குரோமியம், ஈமோகுளோபின் தயாரிப்பிற்கு தேவையான செப்பு, நார்ப்பொருட்கள் போன்ற நன்மைபயக்கக் கூடிய பதார்த்தங்களும் உள்ளன.

சிறுகுறிஞ்சா இலையில் இரத்தத்திலுள்ள சர்க்கரையைக் குறைக்கும் ஆற்றலுள்ள பதார்த்தமொன்று (hypoglycemic action) முதன்முதலாக 1920 இன் பிந்திய காலப் பகுதியில் அறியப்பட்டுள்ளது. ஆனால் நாலாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்ட காலத்திலேயே முனிவர்கள், சித்தர்கள் போன்றோர் தமது ஏடுகளில் சிறுகுறிஞ்சாவின் மருத்துவ மகத்துவத்தை மிகத்தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

ஜிம்னிமிக் அமிலம் (Gymnemic acid) உம், அதன் விளைவுகளும் குளுக்கோஸ் அநுசேபத்தில் (Sugar metabolism) சக்தி வாய்ந்த பதார்த்தங்களாகவுள்ளன. அதாவது குருதியிலுள்ள குளுக்கோசு கலங்களினுட் செல்வதற்கு ஏதுவாக இருந்து குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவை சீர் செய்து சுகவாழ்விற்கு உதவுகின்றன. ஜிம்னிமிக் அமிலமானது ஒரு மூடேபினொயிட் (triterpenoid), குளுக்குரோனிக் அமிலம் (Glucuronic acid) மற்றும் பல கொழுப்பமிலங்கள் (Fatty acid) இணைக்கப்பட்ட சேர்வையாகும். சிறு குறிஞ்சா இலையிலுள்ள ஜிம்னிமிக் அமிலங்கள் (Gymnemic acids) I,II,III மற்றும் IV ஆகியன இனிப்புச் சுவையற்ற (antisweet) பதார்த்தங்களா கும்.

படம்: ஜிம்னிக் அமிலத்தின் (Gymnemic acid) கட்டமைப்பு

### சிறுகுறிஞ்சாவின் மருத்துவப் பயன்பாடுகள்




| பெயர் | $R^1$ | $R^2$ | மூலக்கூற்று சூத்திரம் | மூலக்கூற்று திணிவு |
|---|---|---|---|---|
| ஜிம்னிமிக் அமிலம் I | டைகிலோயில் (Tigloyl) | $CH_3CO$ | $C_{44}H_{66}O_{15}$ | 834 |
| ஜிம்னிமிக் அமிலம் II | 2- மெதைல் பியூட்டைல்சைல் (2-methylbutyl cyl) | $CH_3CO$ | $C_{44}H_{68}O_{15}$ | 836 |
| ஜிம்னிமிக் அமிலம் III | 2- மெதைல் பியூட்டைல்சைல் (2-methylbutyl cyl) | H | $C_{41}H_{66}O_{14}$ | 782 |
| ஜிம்னிமிக் அமிலம் IV | டைகிலோயில் (Tigloyl) | H | $C_{41}H_{64}O_{14}$ | 780 |

ஆரம்ப காலங்களிலிருந்து சிறுகுறிஞ்சா வேர்த்தூளானது பாம்புக்கடி, மலச்சிக்கல், வயிற்று அசௌகரியம் மற்றும் ஈரல்நோய் போன்றவற்றிற்கு சிகிச்சையளிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் தண்டுப் பகுதியின் கசாயம் கசப்புத் தன்மையுள்ளது. இதிலுள்ள ஜிம்னிமிக் அமிலம் (Gymnenic acid) உம், ஏனைய தொழிற்பாட்டுக் காரணிகளும் நீரிழிவு நோய்க்கும் மற்றும் வாந்தி, வயிற்றுவலி ஆகியவற்றிற்கும் மருந்தாகப் பயன்படுகின்றது.

சிறுகுறிஞ்சாவானது அழற்சி (Inflammation), அஜீரணம் (Dyspepsia), மலச்சிக்கல் (Constipation), மஞ்சள் காமாலை (Jaundice), மூலவியாதி (Haem orrhoids), நீர் அருக்கி (Strangury), இருமல் (Caugh), ஆஸ்துமா, மசக்கை ஆஸ்துமா (Asthma), மசக்கை (Amen orrhoea), வெண்குஷ்டம் (Leucoderma) போன்றவற்றிற்கு சிகிச்சையளிக்கப் பாவிக்கப்படுகின்றது. பெண்களின் சூலகத்தில் பல கட்டிகள் (Polycystetic Ovary) இருக்கும் போது, அவர்களிற்கு மாதவிலக்கு காலத்தில் ஏற்படும் வயிற்றுநோவு, அதிகளவு இரத்தப் பெருக்கு ஆகியவற்றிற்கு சிகிச்சையளிப்பதற்கு ஆங்கில மருத்துவ முறையில் நீரிழிவு நோய்க்கு கொடுக்கப்படும் மெற்போமின் (metformin) வழங்கப்படுகின்றது. ஆனால் நாலாயிரம் ஆண்டுகளிற்கு முன்பிருந்தே மெற்போமின் தொழிற்பாடுடைய சிறுகுறிஞ்சாவானது சிறந்த இயற்கை நிவாரணியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறு குறிஞ்சாவானது நீரிழிவு நோயாளர்களின் குருதியில் குளுக்கோஸ் அளவைக் குறைப்பதுடன் குருதியில் கொலஸ்ரோல், கொழுப்பமிலங்கள் மூகிளிசரைட் என்பவற்றையும் குறைக்கும்; குருதியில் ஈமோகுளோபின் அளவை அதிகரிப்பதுடன், பக்கவிளைவுகளற்ற இயற்கை நிவாரணியாக விளங்குகின்றது.

நீரிழிவு நோயானது மாத்திரைகளால் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தால், குருதியில் கிளைக்கோசிலேற்றப்பட்ட ஈமோகுளோபின் (Glycosylated Haemoglobin) அளவு அதிகரிக்காது. எனவே, குருதியில் கிளைக்கோசிலேற்றப்பட்ட ஈமோகுளோபின் அளவு அதிகரிக்குமானால், நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இல்லையென்பது தெளிவாகின்றது. கிளைக்கோசிலேற்றப்பட்ட ஈமோகுளோபின் மிக நீண்ட காலத்திற்கு குருதியில் அதிகரித்துக் காணப்பட்டால், நீரிழிவு நோயாளிக்கு இருதய நோய், சிறுநீரகநோய், கண்பார்வை குறைபாடு, விறைப்புத் தன்மை போன்ற நரம்பு நோய்களின் பாதிப்புகள் ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகரிக்கின்றன.

நீரிழிவு நோயாளர்களில் கிளைக்கோசிலேற்றப்பட்ட ஈமோகுளோபின் அளவைக் குருதியில் முழுக்கட்டுப்பாட்டில் பேணுவதற்கு, ஆங்கில மருந்துகளுடன் சிறு குறிஞ்சாவும் சேர்த்து உட்கொள்ள வேண்டுமென்பது வைத்திய ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட் டுள்ளன.

நீரிழிவு நோய் உருவாக்கப்பட்ட எலிகளிற்கு சிறுகுறிஞ்சா வழங்கப்பட்டு, அவற்றில் நடாத்தப்பட்ட பரிசோதனை மூலம் இன் சுலின் தயாரிக்கும் β–கலங்களின் எண் ணிக்கை நூறுமடங்குகளால் அதிகரித்திருப் பது அறியப்பட்டுள்ளது. ஆகவே, சிறு குறிஞ்சாவானது இன்சுலின் அளவை எலிகளின் குருதியில் அதிகரித்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

மனிதர்களில் இப்பரிசோதனைகளை நேரடியாக மேற்கொள்ள முடியாவிடினும் எலிகளில் மேற்கொள்ளப்பட்ட மனிதனிலும் இதே செயற்பாட்டின் மூலமே இன்சுலின் அளவு அதிகரித்து, குருதியிலுள்ள குளுக்கோசின் அளவை குறைக்கின்றது என்பதனை ஊகிக்கத் கூடியதாகவுள்ளது.

ஆங்கில மாத்திரைகள் உட்கொள்ளாமல், உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியுடன், சிறுகுறிஞ்சாவை உட்கொள்ளும் நீரிழிவு நோயாளர்களில் நூறில் இருபது பேர் நோய் முற்றுமுழுதான கட்டுப்பாட்டுடன் ஆரோக்கியமாக வாழ்கின்றனர். நீரிழிவு நோயாளர்கள் நோய்நொடியின்றி நீண்ட காலத்திற்கு ஆரோக்கியமாக வாழ சிறு குறிஞ்சாவானது இன்றியமையாததாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பலாலி வீதியில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்களின் வழிகாட்டலுடன் இயங்கி வரும் Biotec orient நிறுவனமானது பல சேவைகளை எமது மக்களிற்கு வழங்கி வருகின்றது. இங்கு நீரிழிவு நோயாளர்கள் பெரிதும் பயனடையும் வகையில் சிறுகுறிஞ்சா இலைத்தூள், சிறு குறிஞ்சா தேநீர் (Gymdiabetic tea), சிறு குறிஞ்சா மூலிகை தேநீர் (Gym herbal tea), (இவை முற்றுமுழுதாக சிறுகுறிஞ்சாவிலையிலிருந்து தயாரிக்கப்பட்டவை) என்பன உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவை எமது பிரதேசத்தில் மட்டுமன்றி, கனடா நாட்டிற்கு FDA (Food Drug Adminstration) அனுமதியுடன் ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (தொடரும்)

செல்வி யசோதரா பில்வமங்களம்
உதவி விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை,
யா/பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 29

இரண்டு வேறு வேறு நேர் எண்களின் கனங்களின் கூட்டுத்தொகை ஆக இரண்டு வேறு வேறு முறைகளில் எழுதக்கூடிய மிகச்சிறிய எண் என்ன?

விடைகளை 05-10.2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

புதிர் 28க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி


கணேசபிள்ளை துஷாந்தினி
பாலம் சிறுவர் இல்லம் ,
கோப்பாய் தெற்கு.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

### புதிர் இல . 29

சரியான விடை :........................................
முழுப்பெயர் :........................................
முகவரி :........................................
:........................................
தொ.பே. இல :........................................
கையொப்பம் :........................................

# பொன்சேகா விடயத்தில் வேகமாக சுழல்கிறது வரலாற்றுச் சக்கரம்!



"அது உண்மை யானால் நான் பெருமைப் படுகிறேன்"

சரத்பொன்சேகா


இலங்கை இராணுவ நீதிமன்றம் அந்நாட்டின் ஜெனரலாக இருந்த பொன்சேகாவுக்கு மூன்று ஆண்டு சிறைத்தண்டனை வழங்கி இருக்கிறது.

"என்னைப் பொறுத்தவரையில், இந்த உலகத்திலேயே மிகத் திறமையான இராணுவத் தளபதி சரத் பொன்சேகாதான்!" என்று கம்பீரமாக அறிவித்தவர் இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணன்.

அமைதி தவழும் மேற்கு வங்க மாநிலத்தின் இப்போதைய கவர்னர் அவர். "என்னுடைய இலட்சியத்தை பொன்சேகா சரியாக நிறைவேற்றிக் காட்டினார்" என்றார். ஜனாதிபதி ராஜபக்ஷ 2009ஆம் ஆண்டு மே மாதம் அதனை நிறைவேற்றியவர், அடுத்த இரண்டு மாதங்கள் கூட நிம்மதியாக இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அமைதியான பிறகு சந்திரிகா குமாரதுங்க வீட்டுச் சிறைபோல வைக்கப்பட்ட பிறகு "இனி இலங்கையில் தன்மை எதிர்க்க எவரும் இல்லை" என்று ராஜபக்ஷ நினைத்தபோது பொன்சேகா கிளம்பியதை அவரால் தாங்க முடியவில்லை. காரணங்கள் தேடிக் கைது செய்தார். பலாத்த காரத்துடன் இழுத்துச் செல்லப்பட்டார் பொன்சேகா. குடும்பத்துக்குக்கூட தகவல் தரப்படவில்லை. பொன்சேகா சாப்பிட மறுத்தார். வக்கீல்கூட பார்க்க அனுமதிக்கப்படவில்லை என்று பல தகவல்கள்.

'இராணுவத்தில் இருந்து கொண்டே அரசியல் விடயங்களில் தலையிட்டார்!' என்பது முதல் புகார். அவர் அதுவரை பெற்றிருந்த பதக்கங்கள், விருதுகள் பறிக்கப்பட்டன. 'ஜெனரல்' என்றும் இனி குறிப்பிடக்கூடாது. ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டார். இராணுவத்தில் இருந்து சென்றவர்களைத் தனது அரசியல் உள்நோக்கங்களுக்குப் பயன்படுத்தினார். தேசிய இரகசியங்களைக் கசியவிட்டார் ஆகிய மூன்று வழக்குகள் மீதான தீர்ப்புதான் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை.



"உலகிலேயே மிகத் திறமையான இராணுவத் தளபதி பொன்சேகா தான்"

எம்.கே. நாராயணன்

இது சரத் பொன்சேகா எதிர்பார்த்த தீர்ப்புதான். சில நாட்களுக்கு முன் இலங்கைப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், 'என் மீது விசாரணை நடத்தும் இராணுவ நீதிமன்றத்தைக் காட்டு நீதி மன்றம் என்றுதான் சொல்வேன். என் வக்கீல் எப்படி வாதாடினாலும், ஒன்றும் நடக்கப்போவது இல்லை. தீர்ப்பு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. இலங்கையில் இனி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்றார்!" விரக்தியாக.

"நான் இராணுவத் தளபதியாக இருந்தபோது முள்ளிவாய்க்கால் பகுதியில் புலிகளிடம் இருந்து 200 கிலோ தங்கம் கைப்பற்றினோம். அந்தத் தங்கம் இப்போது எங்கு இருக்கிறது? கே.பி.-யிடம் உள்ள பெருந்தொகைப் பணத்தை அரசாங்கம் பறிக்க



"இனி என்னை எதிர்க்க எவரும் இல்லை"

மகிந்த ராஜபக்ஷ

வேண்டும். போர்க்காலத்தில் இராணுவத்துக்கு உதவிய கருணா, பிள்ளையான் ஆகிய இருவரையும் ஓரங்கட்டிவிட்டு, போரின் போது உதவாத கே.பி.யை அரசு முன்னிலைப்படுத்துவது மடத்தனமானது!" இது பொன்சேகாவின் நாடாளுமன்றப் பேச்சுக்களில் ஒன்று. இவை ஜனாதிபதியை அதிகம் கோபப்படுத்தியதாம்.

இதற்குப் பதிலடியாக, ராஜபக்ஷவின் அமைச்சர்கள், பொன்சேகாவை திட்டித் தீர்க்கிறார்கள். "பாலசிங்கம் பார்த்த வேலையை இப்போது பொன்சேகா பார்க்கிறார் என்கிறார்" ஒருவர். "பொன்சேகாவை உயிரோடு புதைக்க வேண்டும் என்கிறார் இன்னொருவர். "புலிகள் இயக்கத்தின் மனித வெடிகுண்டுப்பெண் ஒருத்தி, பொன்சேகாவின் காதலியாக இருந்தாள் என்று ஒருமந்திரி சொன்னதும் பொன்சேகா சிரித்தபடியே இப்படிச் சொன்னாராம்..." "அது உண்மையானால்.... நான் பெருமைப்படுகிறேன்!". ✠

ஆனந்த விகடன்

# ஓசோனில் விழுந்த ஓட்டை மெல்ல மெல்ல சுருங்குகிறது

## இந்த நூற்றாண்டுள் முழுவதும் மறையும்!

(நியூயோர்க்)

பிரபஞ்சத்தில் இருந்து வரும் பல்வேறு ஆபத்தான ஒளிக்கற்றை களில் இருந்து, பூமியை பாதுகாக் கும் ஓசோன் படலத்தில் ஏற்பட்ட ஓட்டையை, இயற்கை மெல்ல சரி செய்து வருகிறது. இந்த நூற்றான் டின் மத்தியில், ஓசோன் படலத்தில் விழுந்துள்ள ஓட்டை முழு மையாக மூடப்பட்டு விடும் என விஞ்ஞானி கள் தெரிவித்துள்ளனர்.

இன்றைய நிலையில் மனித குலத்தை மிரட்டும் மிகப் பெரிய விடயமாக புவி வெப்பமாதல் உள் ளது. பூமி உருண்டையில் வழக்கத் திற்கு மாறாக அதிக வெப்பம் நில வுவதும் ஆண்டுக்கு ஆண்டு வெப் பத்தின் அளவு அதிகரித்து வருவ தும் பல்வேறு பாதிப்புகளை ஏற்ப டுத்தி வருகிறது. புதிய நோய்கள், விவசாய உற் பத்தி பாதிப்பு மற்றும் பருவ நிலை மாற்றம் என பல பாதிப்புகளால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். புவி வெப்பம் அதிகரிப்பிற்கு மனித தவறுகளால் பூமியின் மேற்பரப்பில் போர்வை போல் போர்த்தப்பட் டுள்ள ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்தது முக்கிய காரணம்.

சூரியனில் இருந்து வரும் புற ஊதா உள்ளிட்ட மனிதர்களை பாதிக்கும் கதிர்களை தடுத்து வெப் பத்தை பூமிக்கு அனுப்பும் கேடய மாக இருப்பது ஓசோன் படலம். அதிகரித்து வரும் கார்பன் கழிவு கள் காரணமாக பூமியின் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இத னால் பூமிக்கு பாதுகாப்பு அளித்து வரும் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்துள்ளது என்று கடந்த 1970



ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. அண்டார்டிக் கண்டத்தின் மேலே உள்ள பகுதியில் இருக்கும் ஓசோன் படலத்தில் விழுந்த ஓட்டை சிறிது சிறிதாக பெரியதாகி வருவதாக கடந்த 1980 ஆம் ஆண்டு விஞ் ஞானிகள் தெரிவித்தனர். ஓசோ னில் ஏற்பட்ட ஓட்டை காரணமாக புற ஊதாக்கதிர்களால் மனிதர்க ளுக்கு தோலில் அழற்சி, கண்ணில் கேட்றாக்ட் மற்றும் தோல் புற்று நோய் போன்றவை ஏற்படும் என் றும் தாவர வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து கடந்த 1987 ஆம் ஆண்டு 196 நாடுகள் மாண் ட்ரீல் நகரில் கூடி ஓசோன் படலத் தின் ஓட்டை மேலும் பெரியதாகா மல் தடுப்பது எப்படி என்று ஆலோ சனை செய்யப்பட்டது. பின்னர் ஓசோன் படலத்தை பாதுகாக்க 196 நாடுகளும் ஒப்பந்தம் செய்து கொண்டன.

இந்நிலையில் நான்கு ஆண் டுகள் ஓசோன் குறித்து 300 விஞ் ஞானிகள் ஆய்வு செய்து அதன் தொகுப்பை அளித்துள்ளனர். அதன் படி கார்பன் கழிவுகள் கட்டுப் படுத்தப்பட்டு வருகின்றன.

ஓசோனை பாதிக்காத பொருட் களை பயன்படுத்துவதால் ஒவ் வொரு ஆண்டும் 10 ஜிகா டன் காபன் கழிவுகள் உருவாவது கட் டுப்படுத்தப்படுகிறது. இதனால் ஓசோன் படலத்தில் விழுந்த ஓட்டை பெரிதாவது தடைப்பட்டு சுருங்கி வருகிறது.

கடந்த 1980 ஆம் ஆண்டில் இருந்த நிலைக்கு எதிர்வரும் 2045 ஆம் ஆண்டு தொடக்கம் 2060 ஆம் ஆண்டு கால கட்டத் தில் ஓசோன் படலத்தின் ஓட்டை அடைந்து விடும் என எதிர்பார்க் கப்படுகிறது. தென் துருவத்தில் ஏற் பட்டுள்ள ஓசோன் படலம் ஒவ் வொரு குளிர் காலத்தின் போதும் அடைவு ஏற்பட முயற்சிப்பதும் பருவ நிலை மாறுபடும் போது ஓட்டை அடைபடுவதில் தடை ஏற்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-4-2)

# அயோத்தி பாபர் மசூதி வழக்கு 16 வருடங்களின் பின் இன்று தீர்ப்பு

## வன்முறை அச்சத்தில் தமிழ் நாடு அரசு



அயோத்தி நிலம் தொடர்பான வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளதால் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் சிவப்பு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இன்று ஊர்வலங்கள் பொதுக்கூட்டம் மற்றும் பேரணிகள் நடத்தத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது. உத்திரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் பாபர் மசூதி இருந்த சர்ச்சைக்குரிய அயோத்தி பூமியாருக்கு சொந்தம் என்பது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் 16 ஆண்டுகளுக்குப் பின் இன்று தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கோவை, திருப்பூர், வேலூர், கன்னியாகுமரி, தஞ்சை, நாகை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் பதட்டமானவை என்று கண்டறியப்பட்டுள்ளன.

தமிழ் நாடு சிறப்புக்காவல் படை மற்றும் அதிரடிப்படை பொலிஸார் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மாநிலம் முழுவதும் சிவப்பு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் வருவாய் துறை அதிகாரிகளுடன் இணைந்து அமைதிக் குழுக்கள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் தமிழகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தலைமைச் செயலாளர் மாலதி நேற்று முன்தினம் மாலை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் பதற்றமான பகுதிகள் கண்டறியப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பதற்றமான இடங்களில் அதிரடிப் படை பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ரோந்துப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பஸ் புகையிரத நிலையங்கள் மார்க்கெட் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாரின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டு பணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதிகாரிகள் தலைமையிடத்தில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. சந்தேகத்துக்குரியவர்களின் நடமாட்டம் கண்காணிக்கப்பட உத்தரவிடப்பட்டுள்ளது. உளவுப் பிரிவு பொலிஸார் முடுக்கி விடப்பட் டுள்ளனர். இது வரை மத்திய அரசில் இருந்து எச்சரிக்கைத் தகவல்கள் வரவில்லை ஆனால் மாநில உளவுப் பிரிவு பொலிஸார் எங்க ளுக்கு சில தகவல்களை கொடுத்துள்ளனர்.

அதை வைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன தீர்ப்பு வெளியாகும் நாளில் ஊர்வலம், பொதுக்கூட்டம், பேரணி நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அமை தியை நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. புகையிரப் பாதைகளில் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்படும். தமிழகம் அமைதியான மாநிலம். பொதுமக்கள் முழு அமைதியை காக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை பொலிசார் எடுத்துள்ளனர். (ச-2)

## பாரதச் செய்திகள்

# யமுனை ஆற்றில் வெள்ளப்பெருக்கு தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கின!

(புதுடில்லி)

யமுனை ஆற்றில் அபாய அளவைத் தாண்டி நேற்று முன்தினம் முதல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

கடைசியாக இங்கு 1978 ஆம் ஆண்டு 207.49 மீற்றர் அளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதன்பின் 32 ஆண்டுகள் கழித்து இப்போது 207 மீற்றர் அளவை வெள்ளம் தாண்டியுள்ளது.

கனமழை காரணமாக பழைய யமுனைப் பாலத்தை வெள்ளம் மூழ்கடித்தது. இதையடுத்து 22 புகையிரத சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. மேலும் 65 ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டன என்று புகையிரத நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆற்றின் அபாய அளவான 204.83 மீற்றரைத் தாண்டி 207.23 மீற்றர் அளவுக்கு வெள்ளம் பாய்ந்ததால் தாழ்வான பகுதிக்குள் வெள்ளநீர் புகுந்தது.

நேற்று மதியம் 207.30 மீற்றர் அளவை வெள்ளம் தாண்டும் என்று எதிர்பார்ப்பதாக நீர்ப்பாசனத்துறை செயற்பொறியியலாளர் டோமர் தெரிவித்தார்.

கர்ஹிமண்டு, உஸ்மான்பூர்புஸ்டா, ஜகத்பூர், யமுனை விகார் மற்றும் மதன்பூர் உள்ளிட்ட பகுதிகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது. இதையடுத்து இங்குள்ள 3 ஆயிரத்து 500 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 40 ஆண்டுகளில் 1967,1971, 1975,1976,1678,1988,1995,1998 ஆகிய ஆண்டுகளில் இதேபோல் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச-4-2)

# ஒரு இலட்சம் லீற்றர் கடல்நீரை பெற்றோலாக மாற்ற முயற்சி!

## மூலிகைப் பெற்றோல் புகழ் இராமர்பிள்ளை சவால்

(சென்னை)

மூலிகை பெற்றோல் புகழ் இராமர்பிள்ளை இந்த முறை கடல் நீரை பெற்றோலாக்கி காட்டப் போவதாக சவால் விட்டுள்ளார்.



எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி காந்தி ஜெயந்தியன்று சென்னையில் ஒரு இலட்சம் கடல் நீரை எரிபொருளாக்கிக் காட்டப் போவதாகவும் அவர் கூறியுள்ளார். விருதுநகர் மாவட்டம் மம்சாபுரத்தைச் சேர்ந்தவர் இராமர் பிள்ளை. இவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு மூலிகை பெற்றோல் தயாரித்திருப்பதாக கூறி பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். இதை பல்லேறு ஆய்வாளர்கள் பரிசோதித்தனர். விஞ்ஞானிகளும் பரிசோதித்தனர்.

இறுதியில் இது பெற்றோல் இல்லை என்று கூறி விட்டனர். இதன் காரணமாக இராமர் பிள்ளையின் மூலிகை பெற்றோலுக்கு காப்புரிமை கிடைக்கவில்லை .அதன் பின்னர் தனது பார்முலாவை பறிக்க முயற்சி, ஆள்கடத்தல் என பல சர்ச்சைகளில் சிக்கினார் இராமர் பிள்ளை .இந்த நிலையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், நான் கண்டுபிடித்த மூலிகை எரிபொருள் உண்மை என்று ஐரோப்பா யூனியனை சேர்ந்த டென்மார்க் அறிவியல் தொழில்நுட்ப பரிசோதனை கூடத்தில் சான்றிதழ் பெற்றுள்ளேன்.

நான் உற்பத்தி செய்யும் எரிபொருள் பெற்றோலுக்குப்பதிலாக விளங்குகிறது என அங்கீகாரம் வழங்கி உள்ளது. மேலும் உலக காப்புரிமை அமைப்பு எனது கண்டுபிடிப்பை புதுமையானது என்றும் காப்புரிமை பெற தகுதியானது என்றும் கூறியுள்ளது.

எனது எரிபொருள் உற்பத்திக்கு இந்தியாவிலும் காப்புரிமை பெற விண்ணப்பித்துள்ளேன். விரைவில் காப்புரிமை கிடைக்கும் என்று நம்புகிறேன். நான் பெற்ற இந்த வெற்றியை முதல்வர் கருணாநிதியின் பாதத்தில் சமர்ப்பித்து உலகநாடுகளின் எரிபொருள் பற்றாக்குறையை சரி செய்வேன்.

ஒரு லீற்றர் எரிபொருள் உற்பத்தி செய்ய 5 ரூபாய் மட்டுமே செலவாகிறது. நான் தற்போது அமோனியம் குளோரைடு மற்றும் பிரக்டோஸ் சிட்ரிக் அமிலம் ஆகியவற்றை தண்ணீரில் கலந்து எரிபொருள் தயாரிக்கின்றேன் இது ஒரு முறை.

இதுபோல 10 முறைகள் உள்ளன. சிட்ரிக் அமிலத்திற்கு எலுமிச்சம் பழச்சாற்றை பயன்படுத்துகிறேன். ஒக்டோபர் 2ஆம் திகதி சென்னை மெரினா கடற்கரையில் ஒரு இலட்சம் லீற்றர் கடல்நீரை எடுத்து பெற்றோலுக்கு மாற்று எரிபொருளாக மாற்றிக்காட்டுவேன்.

சிலர் மிரட்டி என்னுடைய காப்புரிமையை கைப்பற்ற தீய எண்ணத்துடன் செயற்படுகிறார்கள். அவர்கள் யார் என்று எழுத்து மூலம் சென்னை மாநகர பொலிஸ் கமிஷனரிடம் புகார் கொடுக்கவுள்ளேன் என்று இராமர் கூறினார். (எ-4-2)

# காஷ்மீர் வன்முறையை நிறுத்த ஐ.நா.சபை அவசர வேண்டுகோள்

(நியூயோர்க்)

கடந்த 4 மாதங்களாக காஷ்மீரில் தொடரும் வன்முறையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்று ஐ.நா கோரிக்கை விடுத்துள்ளது.

காஷ்மீரில் அமைதியை நிலைநாட்ட அந்த மாநிலத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது அவசியம் என்று ஐ.நா. வின் பொதுச் செயலாளர் பான்கீமூன் வலியுறுத்தியுள்ளார். காஷ்மீரில் தொடரும் வன்முறை தொடர்பாக பான்கீமூன் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்விதம் கேட்டுக் கொண்டுள்ளார்.

காஷ்மீரில் நடந்த வன்முறையில் இது வரை 100 பேர் பலியாகியுள்ளது கவலையை அளிக்கக்கூடிய விடயமாகும். இனிமேலும் காஷ்மீரில் வன்முறை தொடர சந்தர்ப்பம் வழங்கக்கூடாது. வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர அனைத்துத் தரப்பினரும் தங்களது பங்களிப்பை வழங்கவேண்டும்.



சுமுகமான முறையில் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

காஷ்மீரில் பிரச்சினை வெடித்ததில் இருந்தே அங்கு நிலவும் சூழலை பான் கீமூன் கூர்ந்து கவனித்து வருவதாக அவரின் செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் நெசிர்கி தெரிவித்தார். (எ-4-2)



யா/ வேலணை மத்திய கல்லூரியின் நவோதயா வார நிகழ்வில் கணித விஞ்ஞான தகவல் தொழிநுட்பநாள் நேற்று முன்தினம் கணித விஞ்ஞான கழகப் பொறுப்பாசிரியர் ஆர்.விஜயதீபன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக கல்வி வலய கணிதபாட ஆசிரிய ஆலோசகர் ப.ஆரூரன் மற்றும் வேலணை மத்திய கல்லூரியின் அதிபர் பொ.அருணகிரிநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் மாணவர்களின் புத்தாக்கக் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# ஆஸி.க்கு சட்டவிரோத பயணம் இலங்கையர் 57 பேர் கைது

(சென்னை)

இந்தியாவில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு கள்ளத் தோணியில் செல்லத் திட்டமிட்டு இருந்த இலங்கை அகதிகள் 57 பேர் தமிழ் நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியில் வைத்து கியூ பிரிவு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பொலிஸார் கூடலூர் வீதியில் இவர்களை கைது செய்து மசின்குடிய பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று விசாரித்துள்ளார்கள்.

தமிழ் நாட்டின் புழம், சேலம் மற்றும் தொம்பட்டி போன்ற அகதி முகாம்களில் வசிக்கும் இவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமான முறையில் செல்ல இலட்சக் கணக்கான ஒரு தொகைப்பணத்தை முகவர் ஒருவருக்கு கொடுத்திருக்கின்றார்கள் என்றும் ஆஸி பயணம் தாமதம் ஆகின்ற நிலையில் உல்லாசப்பயணம் ஒன்றை மேற்கொண்டு ஊட்டிக்கு புறப்பட்டு வந்திருக்கின்றார்கள் என்றும் விசாரணைகளில் இருந்து தெரிய வநற்துள்ளது.

இதில் 11 பெண்களும் 11 ஆண்களும் அடங்குவர்.

(எ-4-2)

# எம்.வி.சன்.சீ.கப்பலில் சென்ற தமிழரில் 150 பேருக்கு கனடாவில் உறவுகள் இல்லை

(கொழும்பு)

எம்.வி.சன்.சீ. கப்பலில் கனடாவை சென்றடைந்திருக்கும் இலங்கைத் தமிழர்கள் 492 பேரில் 150 பேர் வரையானோருக்கு நண்பர்களோ உறவினர்களோ கனடாவில் இல்லை என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இவர்கள் காசுப் பிணையில் விடுவிக்கப்படுகின்றமையில் நிதிச் சிக்கல்கள் தோன்றலாம் எனவும் அங்குள்ள புலம் பெயர் தமிழ் சமூகம் தான் இவர்கள் காசுப்பிணையில் வெளியே வருகின்றமைக்கு மனிதாபிமான அடிப்படையில் நிதி உதவி செய்ய வேண்டும் என்று கனேடியத் தமிழர் பேரவை கோரியுள்ளது.

இவர்களுக்கு ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் வரை ஒவ்வொருவருக்கும் காசுப் பிணையாக தேவைப்படலாம் என்று கனேடிய தமிழர் பேரவைப் பேச்சாளர் டேவிட் பூபால பிள்ளை தெரிவித்துள்ளார்.

(ச-4-2)

# எழிலன் உள்ளிட்ட புலித்தலைவர்கள் இராணுவத்திடம் சரணடையவில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்கள் இராணுவத்தினால் தடுத்து வைக்கப்படவில்லை என இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

எழிலன் உள்ளிட்ட ஏழு சிரேஷ்ட தலைவர்கள் படையினரிடம் சரணடைந்ததாகவும் இராணுவத்தினர் மறைமுகமான இடத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும் எழிலனின் மனைவி ஆனந்தி சசிகரன் அண்மையில் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

எனினும் ஆனந்தி சசிகரனின் இந்தக் கூற்று உண்மைக்குப் புறம்பானதென இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் சரணடைந்த சகல விடுதலைப்புலி உறுப்பினர்களும் புனர்வாழ்வு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

எழிலன் உள்ளிட்ட குழுவினர் அரசாங்கப் படையினரிடம் சரணடையவில்லை. இராணுவத்தினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரகசியமான தடுப்பு முகாம்களை பேணவில்லை எனவும் அவர் கூறினார்.

(எ-4-2)

# முப்பெரும் (கசப்பு).....

9ஆம் பக்கத் தொடர்ச்சி

அழைத்தால் நிச்சயம் வருவார்!" என்று பதில் வந்ததாம்.

"நாகர்கோவிலில் இருந்து மதுரைக்குப் போய் வரவே எட்டு மணி நேரம் தேவை. அங்கே இரண்டு மணி நேரம் தேவை. 10மணி நேரத்தை இன்றைக்கு என்னால் செலவழிக்க முடியாது. காலையில் தளபதி வந்து இறங்கி விட்டார். அவரை அழைத்துப் போய் பொதுக் கூட்டம் நடக்கும் மேடையைக் காட்டியாக வேண்டும். அதோடு, இரண்டு அரசு விழாக்களும் இருக்கின்றன. அதையெல்லாம் விட்டுவிட்டு என்னால் போக முடியாது!" என்று சுரேஷ்ராஜன் விளக்கம் அளித்தார் என்கிறார்கள்.

அடுத்த சிறிது நேரத்தில் தலைவரே சுரேஷ்ராஜனை தொடர்புகொண்டு பேசினார் என்றும், அவரிடமும் நடந்ததை சுரேஷ்ராஜன் விவரித்தார் என்றும் தகவல். தொண்டர்கள் கூடும் தனிப் பெரும் திருவிழாவை நடத்துவதற்குள் இப்படி ஓர் உணர்ச்சிப் போராட்டமா என்று வருந்தியபடி தலைவர் போனை வைத்ததாகச் சொல்வோரும் உண்டு.

மூத்த அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்துக்கு இந்தத் தகவல்கள் சென்றன. "நான் வேண்டுமானால் தம்பியிடம் பேசவா?" என்று தலைமையிடம் அனுமதி கேட்டு வாங்கினாராம்.

"என்னுடைய வாழ்நாளில் இது முக்கியமான விழா. பெரியார் பெயரிலான விருதை நான் வாங்கு கிறேன். அதற்கு நீங்கள் வராமல் இருக்கக் கூடாது. நிச்சயம் வந்தாக வேண்டும்!" என்று வீரபாண்டியார் சொல்ல... "உங்களை நான் மதிக்கிறேன் அண்ணே!" என்று மட்டும் அழகிரி, "நமக்காகப் பாடுபடுறவங்களோட உணர்வையும் மதிக்கணுமே!" என்றபடி கசப்புகளைப் பட்டியல் போட்டதாகவும்... தகவல் தெற்கில் பரவியது.

"வருத்தங்கள் யாருக்கும் இருக்கலாம். அதற்கு உரிய விளக்கங்களை கட்சி கொடுக்கும். ஆனால், தொண்டனும் கட்சியும்தான் முக்கியம். திகதி குறித்த பிறகு, எதிலும் எங்கும் சுணக்கம் கூடாது!" என்று எரிமலை குரலில் கண்டிப்பாக சொன்னாராம் கருணாநிதி. அதே சமயம், சென்னையில் இருந்து பறந்து வந்த கட்டளையை ஏற்று அழகிரி மற்றும் கனிமொழிக்காக பிரத்தியேக விளம்பரங்களை சுரேஷ்ராஜன் வெளியிட்டு குஷிப்படுத்தியதும் நடந்தது!

# ஆசிரியரைச் சுட்டுக்கொன்று விட்டு கொலையாளியும் தற்கொலை

## மொனராகலையில் விபரீதம்

(கொழும்பு)

மொனராகலை மாவட்டத்தில் உள்ள சிம்பலாண்டுவ மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த ஆசிரியர் ஒருவர் அப் பாடசாலையில் வைத்து நேற்று காலை துப்பாக்கிதாரி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையாளியும் பின்னர் தன்னை துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர். கொலையாளி ஒரு இளைஞர் என்றும் இருவருக்கும் இடையிலான தனிப்பட்ட தொடர்பே இவ் விபரீதத்திற்கு காரணம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

பாடசாலைக்குள் திடீரென புகுந்த பிரஸ்தான இளைஞன் ஆசிரியரை நோக்கிச் சென்று இரண்டு துப்பாக்கியால் சுட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(எ-4)

# செயற்குழு கூட்டம்

பலநூற்றுக் கணக்கான அரச ஓய்வூதியர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட பகிரங்க ஓய்வூதியச் சங்கம் போரினால் இடம்பெயர்ந்து கடந்த இரு வருடகாலமாக செயற்பாடுகள் எதுவும் இல்லாத நிலையில் மீண்டும் தனது அங்கத்தவர் நலன் கருதி நடவடிக்கை எடுத்திருப்பதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ். பெருமாள் தெரிவித்தார்.

இச்சங்கத்தின் முதலாவது செயற்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலகத்தில் அமைந்த சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இச்சங்கப் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

(2-84)

பையில் துவாரம் இருந்தால் அதில் பணத்தை நிரப்பிப் பயனில்லை. ~ ஜார்ஜ் எலியட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் தரும் படிப்பினைகள்

2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றையதினம் வெளியாகியுள்ளன.

பரீட்சைப் பெறுபேற்றின் முடிவுகள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது என்றே கூறவேண்டும்.

தமிழ் மொழிமூல மாணவர்களில் முதல் மூன்று இடங்களில் எதனையும் யாழ்ப்பாண மாவட்டம் பெற்றுக்கொள்ளாமையே அதிர்ச்சிக்கான காரணமாகும்.

அதேநேரம் தமிழ் மொழி மூலத்தில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பிலுவில் கிராமத்து மாணவி ஒருவர் 193 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தையும், கண்டியைச் சேர்ந்த மாணவன் இரண்டாம் இடத்தையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் தம்பிலுவில் கிராமம் மிகவும் பின்தங்கிய இடம். இங்கிருந்து ஒரு மாணவி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலத்தில் முதலாமிடத்தைப் பெற்றிருப்பது மனதாரப் பாராட்டப்பட வேண்டிய விடயம்.

அதேநேரம் கல்வியின் மையத்தளம் என்ற பெருமையையும் வளங்களின் தாராளக் கிடைப்பனவும் கொண்ட யாழ்ப்பாணத்து மாணவர்கள் முதல் மூன்று இடங்களில் எதனையும் தமக்காக்கிக்கொள்ளாமல் விட்டமை குறித்து வேதனை அடையாமல் இருக்கமுடியாது.

அத்தோடு இந் நிலைமைக்கான காரணங்களை கண்டறிவதும் அதற்குப் பரிகாரம் காண்பதும் அடுத்துவரும் ஆண்டுகளிலேனும் கவலை கொள்வதை தவிர்ப்பதற்கு உதவியாக அமையும்.

அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் தரம் ஐந்து மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக கடுமையான மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். இதனால் அவர்களின் சுய சிந்தனையும் சுதந்திரமான தேடல்களும் இல்லாது போக,

பரீட்சையில் சித்தியடைதல் என்ற இலக்கு மட்டுமே நிறைவேற்றப்படுகின்றது.

இதனால் பிள்ளைகளின் இயல்பான திறமைக்கு இடமில்லாமல் போகும் பரிதாபம்.

இதற்கு அடிப்படைக் காரணமாக அமைபவர்கள் பெற்றோர்களும் புலமைப்பரிசில் பரீட்சையை நல்லூர் திருவிழாக் கால கடைபோல நினைக்கும் இலாபமீட்டிகளுமே என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை நடத்துவதில் காணப்படும் கடும்போட்டிகள், அங்கொரு கருத்தரங்கு, இங்கு ஒரு கருத்தரங்கு என்ற பிய்த்துப் பிடுங்கல்கள். மாணவர்களிடம் பணத்தைக் கறப்பதற்காக, தலைவர் கருணாநிதி கோவைக்கு வருகிறார்,தளபதி ஸ்ராலின் மதுரைக்கு வருகிறார் என்ற பாணியில் யாழ்ப்பாணத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு.

இதோ! அவர் வருகிறார்! இவர் வருகிறார்! என்ற விளம்பரங்கள். இந்த நாசங்களால் தான் நாங்கள் மோசம் போகின்றோம்.

அன்பார்ந்த பெற்றோர்களே! புலமைப் பரிசில் பரீட்சையில் முதலிடங்களில் சித்தியடைந்த மாணவர்களின் செவ்விகளை நீங்கள் கேட்டால், அந்தப் பிள்ளைகள் பாடசாலையிலும் வீட்டிலும் மட்டுமே படித்தார்கள் என்ற உண்மை தெரியவரும்.

என்ன செய்வோம்? மகாமகத் திருவிழா போல் நடக்கும் கருத்தரங்குகளுக்கு காசைக் கொட்டாவிட்டால் எங்களுக்கு பத்தியப்படாதே. இனியாவது சிந்தியுங்கள்.

## அரிய பல நூல்கள் இருந்தபோதிலும் அதைப் பயன்படுத்துவோரின் தொகை குறைவு

# யாழ்.பொது நூலகர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக யாழ்.பொது நூலகர் எஸ்.தனபாலசிங்கம் கவலை தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களாக பல்வேறு தரப்பினரால் பலகோடி ரூபாய் பெறுமதியான புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றினைப் பயன்படுத்தி பலன்பெற எவரும் முன்வருவதில்லை என அவர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.பொது நூலகத்தில் பலபெறுமதியான புத்தகங்கள் உள்ளன. அண்மையில்கூட 2 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஆங்கில அகரர்திகள், ஆங்கிலப் புத்தகங்கள், ஆங்கில அறிவுசார் இறுவெட்டுகள், கணனிப் பதிவுகள் என்பனவும் கிடைக்கப்பெற்றுள்ளன.


இதனைவிட மிகப்பழமை வாய்ந்த புத்தகங்கள், மிக அரிய புத்தகங்கள் என்பனவும் பொது நூலகத்தில் உள்ளன. ஆனால் எவரும் அவற்றைப் பயன்படுத்த முன்வருவதில்லை.

வாசகர் பற்றாக்குறையை கருத்திற் கொண்டு எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதியன்று வாசிப்பு தினத்தை முன்னிட்டு நடமாடும் நூலகம் ஒன்றினை நடத்த திட்டமிட்டுள்ளோம். இந்நாளில் வாசகர்களாக இணைவோருக்கு கட்டணக்கழிவு வழங்கவுள்ளோம். இதுவரைகாலமும் 500 ரூபாயாக இருந்த கட்டணம் 150 ரூபாயாக அன்றையதினம் குறைக்கவுள்ளோம்.

நூல்கள் எவ்வளவு அன்பளிப்பாகிறதோ அதே அளவுக்கு அவை பயன்படுத்தப்படவும் வேண்டும். பாதுகாக்கப்படவும் வேண்டும். நூல்களைப் பாதுகாப்பான முறையில் வைப்பதற்கு நூலகத்திற்கு அலுமாரிகள் போதியளவாக இல்லை.

அத்தோடு நூலகத்திற்கு கணனிகளும் போதியளவு இல்லை. ஏற்கனவே உள்ள கணனிகள் பழுதடைந்து போயுள்ளன. எனவே நூலகத்திற்கு கணனிகள் உடனடியாகத் தேவைப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

நூலகத்திற்கு உதவ முன்வருபவர்கள் இவ்வாறான உதவிகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறினார். (ச-6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சரஸ்வதி பூஜையும் புதன் கிரகமும்

சரஸ்வதி பூஜை குறிப்பிட்ட சில ஆண்டுகள் தவிர மற்ற ஆண்டுகளில் புரட்டாதி மாதத்தில் வரும். சரஸ்வதி பிறந்த திதி நவமி. திதியின் அடிப்படையில் சில சமயங்களில் ஐப்பசியில் வரும்.

பெரும்பாலும் புரட்டாசியில் இந்த பூஜை நடத்தப்படுவதற்குக் காரணம் உண்டு. ந்வக்கிரகங்களுக்கு நடுநாயகமான சூரியன் சித்திரையில் மேஷ ராசியில் துவங்கித புரட்டாசியில் கன்னியில் சஞ்சாரம் செய்கிறார்.

கன்னி ராசிக்குரிய கிரகம் புதன். இவரை வித்யா காரகன் என்பர். 'வித்யாகாரகன்' என்றால் கல்வி, புத்தி, தொழில் ஆகிய அனைத்திற்கும் மூல காரணமாக இருப்பவர் எனப் பொருளாகும்.

புதனுக்குரிய ராசியான கன்னியில் கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தேவியை வழிபடுவது உத்தமமாகும்.

## சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு

### சவுதி அரசு அறிவிப்பு

சவுதி அரேபியாவில் சட்டவிரோதமான முறையில் தங்கி இருக்கும் இலங்கையர்களுக்கும் ஏனைய வெளிநாட்டவர்களுக்கும் அந்நாட்டு அரசினால் பொது மன்னிப்பு வழங்கப்படுகின்றது.

இப் பொது மன்னிப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அடுத்த மார்ச் 25 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும். இப் பொதுமன்னிப்பைப் பெற விரும்புபவர்கள் அவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள குடிவரவு அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்று சவூதி அரசு கேட்டுள்ளது.

ஆயினும் இப் பொதுமன்னிப்பு காலத்தின் பின் எவராவது வெளிநாட்டவர்கள் அங்கு தங்கியிருக்கின்றமை கண்டு பிடிக்கப்பட்டால் கடுமையான தண்டனை வழங்கப்பட்டு நாடுகடத்தப்படுவார்கள் என்றும் எச்சரித்துள்ளது. (ச-5)

## நூல் வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானசுடர் புரட்டாதி மாத இதழ் வெளியீட்டுவிழா இன்று வெள்ளி க்கிழமை 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை சிவ.ஆறுமுக சாமி,மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் பண்டிதர் சி.வேலாயு தம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (4-35)

## வெள்ளி நற்சிந்தனை 141

### பக்தியின் மொழி தமிழ்

இறைவனுடைய கோல அழகை நாயன்மார்கள் பாடல்களில் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளனர். சொற்சித்திரங்களாக அமைந்த அப்பாடல்கள் நாயன்மார்களின் செந்தமிழ் புலமைத் திறனுக்கும் புனைவுத்திறனுக்கும் சான்றாக உள்ளன. பாடல்களைப் படிக்கும் போது இறைவனின் அருள் பொலியும் திருக்கோலக் காட்சி எமது மனக்கண்ணிலே துல்லியமாகத் தெரிகிறது.தேவாரங்களில் இயற்கை அழகும் இறைவன் கோல அழகும் இணைந்துள்ளமை இன்னொரு தனிச் சிறப்பாகும். திருக்கோயிற் சூழல் அழகும் இறைவன் திருக் கோல அழகும் சுந்தரருடைய பாடல்களில் சிறப்பாக இணைந்துள்ளன.

இறைவனைப் பற்றிக் குறிப்பிடும் போது சுந்தரர் 'அட்டன்' எனச் சிறப்பாகக் கூறியுள்ளார். 'அட்டன்' என்பது எட்டுத் திக்குகளையும் ஆள்பவன் எனப் பொருள் தரும். எம்மைச் சுற்றியுள்ள திசைகளை முதலில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்காகப் பகுத்துள்ளனர். மேலும் இவை வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு என நான்காகப் பகுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 'அட்டன்' என்ற சொல் உலகின் எல்லாப் பகுதிகளையும் ஆள்பவன் என்ற பரந்த பொருளைத் தருகிறது. இறைவன் தன்னுடைய அரையிலே அழகாகப் பாம்பைச் சுற்றி அணிந்திருக்கின்றான். 'அழகாக வரை தன்மேலரவார்த்து' என்ற தொடர் இதனை விளக்கி நிற்கிறது.

அடுத்து இறைவியின் திருக்கோலம் பற்றிக் குறிப்பிடும் போது 'பட்ட வரிநுதலாள்' எனக் குறிப்பிட்டுள்ளார். அழகான நெற்றியிலே ஒரு நெற்றிப்பட்டம் வரிந்து கட்டப்பட்டுள்ளது. பெண்களின் தலையணி கலன்களில் நெற்றிப்பட்டம் மிக முக்கியமானது. கூந்தல் முகத்திலே வந்து படியாமல் நெற்றிப் பட்டம் கட்டும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. தற்காலத்தில் திருமணம், நடனம் போன்ற சிறப்பு நடைமுறைகளில் நெற்றிப்பட்டம் அணியும் வழக்கம் உள்ளது. இறைவியோடு எல்லோரையும் பாதுகாக்கின்ற பெரியவனான இறைவன் உடனமர்ந்திருக்கும் காட்சியில் மேற் குறிப்பிட்ட அணிகலன் அலங்காரத்தைச் சுந்தரர் குறிப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இறைவனுடைய அணிகலன் இயற்கையோடிணைந்துள்ளது. இறைவியின் அணிகலன் கலை நுட்பத்தோடு பொலிந்திருக்கிறது. அத்துடன் சுந்தரர் அணிகலன்கள் அணியப்படும் புனைதிறனையும் இப்பாடலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறைவன் எல்லோரையும் ஆள்பவன் என்பதையும் 'நமையாள்வான்' என்ற சொற்றொடரால் குறிப்பிட்டுள்ளார். எட்டுத் திக்குகளையும் பேணுகின்ற பொறுப்பையுடைய


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

சிட்டனே. அங்கு வாழும் உயிரினங்களையும் பேணி ஆள்கின்றவனாவான்.

மாதோட்டத்தின் இயற்கை அழகையும் தனித்துவமாக இந்தப் பாடல் விளக்கியுள்ளது. 'மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்டம்' என்ற தொடர் மாதோட்டத்தின் அழகைத் தெளிவாகக் காட்டியுள்ளது. தேனை நிறைய உண்ட வண்டினங்களின் மகிழ்வான ஒலிப்புச் சூழவுள்ள பூம்பொழில்களில் தனிக் கவர்ச்சியாக உள்ளது. திருக்கோயிலை வழிபட வருகின்ற மக்களது செவியில் இம் மகிழ்வான வண்டுகளின் ரீங்காரம் கேட்பது மகிழ்ச்சியைத் தரும்.

அட்டன காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன் னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேற்
சிட்டன் நமை யாள்வான்றிருக் கேதீச்சரத்தானே

# உலகின் மிகப்பெரிய சொகுசு கப்பல்
# டிசெம்பர் மாதம் வெள்ளோட்டம் வருகிறது



(மெல்பேர்ன்)

உலகிலேயே மிகப்பெரிய விரைந்து செல்லக்கூடிய இலகுரக சொகுசு அலூர் எனும் போர்க்கப்பல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதன்முறையாக வெள்ளோட்டத்திற்கு விடப்படும் என கப்பல் தயாரிப்புப்பணியினை மேற்கொண்டு வரும் ராயல் கரிபியன் இன்டர்நேஷனல் எனும் கப்பல் கட்டுமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் இந்த நிறுவனம் உலகின் முன்னணி மெகா பயணிகள் சொகுசு கப்பல் போர்க்கப்பல்களை தயாரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் அலூர் எனும் உலகின் மிகப்பெரிய சொகுசு கப்பலினை அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஈவர்கிளேட் துறை முகத்தில் அதன் கட்டுமானப் பணிகள் நடைபெற்று முடியும் நிலையில் உள்ளன.

இந்த சொகுசு கப்பல் குறித்து அதன் கப்டன் ஹெர்மான் ஜினி கூறுகையில்,

அலூர் கப்பல் கட்டும் பணி கடந்த 2007 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. 16 அடுக்குகளையும் 50 மீ. நீளமும் 65 மீற்றர் அகலத்தையும் கொண்டது. 2 இலட்சத்து 25 ஆயிரத்து 282 தொன் எடையினை தாங்கும் திறன் கொண்டது. 2 ஆயிரத்து 700 அறைகள் , 6 ஆயிரத்து 296 பயணிகளும் 2 ஆயிரத்து 394 கப்பல் படை பணியாளர்களும் தங்கும் வகையில் சிறிய நகரம் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விளையாட்டுமைதானம், பூங்கா, ஆடிட்டோரியங்கள் உட்பட பல்வேறு அம்சங்களுடன் உள்ள அலூர் கப்பல் கட்டும் பணிகள் தற்போது முடியும் நிலையில் உள்ளன. இந்த கப்பல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் பயணிகள் போக்குவரத்துக்கு விடப்படும் என்றார். (ச-4-2)

## செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது சீனா

யாவோகன் லெவன் என்ற செயற்கைக் கோளை கான்சு மாகாணத்தில் உள்ள விண்வெளித் தளத்தில் இருந்து சீனா நேற்று முன்தினம் புதன்கிழமை விண்ணில் செலுத்தியது.

உள்ளூர் பல்கலைக்கழக மாணவர்கள் தயாரித்த மேலும் 2 செயற்கைக் கோள்களும் புதன்கிழமை விண்ணில் செலுத்தப்பட்டன. இந்தச் செயற்கைக் கோள்கள் நில அளவை, பேரழிவைத் தடுக்கும் முறைகள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யும் என சீனா தெரிவித்துள்ளது. (எ-4-2)

# பூமியை நெருங்கி வந்துள்ள வியாழனை இரவில் பார்க்கலாம்



சூரிய குடும்பத்தில் உள்ள பெரிய கிரகமான வியாழன் கிரகம் கடந்த 21 ஆம் திகதி பூமிக்கு மிக அருகில் (59 கோடியே 40 இலட்சம் கி.மீ தொலைவில்) வந்துள்ளது.

கடந்த 1963 ஆம் ஆண்டுக்குப் பின் வியாழன் கிரகம் பூமிக்கு அருகே நெருங்கி வந்திருப்பது இதுவே முதல்முறையாகும். மீண்டும் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு தான் இதுபோல நெருங்கி வரும்.

எனவே தற்போது பூமிக்கு நெருக்கத்தில் உள்ள வியாழன் கிரகத்தை பெரிதாக காண அருமையான வாய்ப்பு உருவாகியுள்ளது.

சூரியன் மறைந்த பின் கிழக்கு வானத்தில் வியாழன் கிரகத்தைக் காணலாம். 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வியாழன் கிரகம் தெரியும் .அத்துடன் அடுத்த மாதம் 3 ஆவது வாரம் வரை வியாழன் கிரகம் பிரகாசமாக தெரியும்.

மேலும் நேற்று முதல் அடுத்த மாதம் 3 ஆவது வாரம் வரை மேற்கு வானத்தில் இரவு நேரத்தில் வெள்ளி கிரகத்தையும் இன்று புதன் கிரகத்தை கிழக்கு திசையில் அடிவானத்துக்கு அருகே காணலாம் என தெரிவிக்கப்படுகிறது. (எ-4-2)




# அமெரிக்காவின் போக்குக்கு இந்தியா கடும் எதிர்ப்பு

இந்தியாவின் பணிகளுக்கு தடை விதித்த அமெரிக்காவின் ஒகையோ மாகாணத்தின் செயல் விரும்பத்தக்கது அல்ல. இது தொடர்பாக அமெரிக்காவிடம் இந்தியா தன் கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கும் என மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

வோஷிங்டனில் வர்த்தக கொள்கை அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்க வந்த அமைச்சர் ஆனந்த் சர்மா கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்காவின் ஒகையோ மாகாண அரசுத் துறையினர், அவுட்சோர்சிங் முறையில் தங்களின் பணிகளை மற்ற நாடுகளிடம் தர தடை விதிக்கப்பட்டுள்ளது. இது சரியானதல்ல .இது தொடர்பாகவும் தொழில் நிபுணர்களுக்கான விசா கட்டணத்தை அமெரிக்கா உயர்த்தியதற்காவும் அமெரிக்க அரசின் மற்ற பல தற்காப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்தியா தனது கடும் ஆட்சேபத்தை தெரிவிக்கும்.

இந்திய நிறுவனமான ஏர்டெல், ஐ.பி.எம்.க்கு தொடர்பாக 15 ஆயிரத்து 750 கோடி ரூபாய்க்கு ஆர்டர் கொடுத்துள்ளது. இதனால் அமெரிக்காவுக்கு பெருமளவு வேலை வாய்ப்புகள் உருவாகும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இதேபோல் போயிங் ரக விமானங்கள் வாங்க இந்தியா பெருமளவு ஆர்டர் கொடுத்துள்ளது. இதன் மூலமும் அமெரிக்காவில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.


பொருளாதார மந்த நிலையில் இருந்து தற்போது தான் உலக பொருளாதாரம் மீண்டு வருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இது போன்ற தற்காப்பு நடவடிக்கைகளை அமெரிக்க நிர்வாகத்தினர் எடுப்பது பொருளாதார மந்த நிலையில் இருந்து நாடுகள் மீள்வதை தடுக்கும். இவ்வாறு ஆனந்த் சர்மா கூறினார். (ச-2)



4 நாட்கள் பயணமாக அமெரிக்கா மற்றும் ஐ.நா. பொதுச்சபைப் கூட்டத்தில் பங்கேற்க செல்லும் ஜப்பான் பிரதமர் நௌட்டோகான் (வலது), டோக்கியோ விமான நிலையத்தில் சிறப்பு விமானம் மூலம் புறப்படும் முன் தனது அமைச்சர்களை பார்த்து கையசைத்தார்.

# நேபாள காங்கிரஸ் தலைவராக சுஷில் கொய்ராலா தேர்வு

(காத்மாண்டு)



நேபாள காங்கிரஸ் தலைவராக கட்சியின் மூத்த தலைவர் சுஷில் கொய்ராலா தேர்ந் தெடுக்கப்பட்டார்.

மொத்தம் பதிவான 3 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளில் அவருக்கு ஆயி ரத்து 652 வாக்குகள் கிடைத்தன.

அடுத்தபடி யாக பகதூர் தியுபா ஆயிரத்து 317 வாக்கு கள் பெற்றார். இதன் மூலம் 335 வாக்குகள் வித்தியாசத்தில் சுஷில் கொய்ராலா வெற்றி பெற்றார். அவர் 4 ஆண்டுகள் தலைவர் பதவியை வகிப்பார். (எ-4-2)



ஜெர்மனிக்கு விஜயமொன்றை மேற்கொண்ட எகிப்து ஜனாதிபதி ஹோஸினி முபாரக்கை (இடது), அந்நாட்டு சான்சலர் ஏஞ்சலா மார்க்கெல் பெர்லின் தனது மாளிகையில் வரவேற்றார்.

# அல்கொய்தாவுடன் தொடர்புடைய 28 பேர் ஓமானில் கைதாகினர்

(சானா)

ஏமன் நாட்டில் இராணுவத்தினர் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்திய அதிரடி வேட்டையில் அல்கொய்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 28 பேர் கைது செய்யப்பட்டனர். ஏமன் நாடு சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனின் முன்னோர்கள் வசித்த நாடு.

இந்நிலையில் ஷாபவ் மாகாணத்தில் ஹோட்டா டவுணில் அல்கொய்தா பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக ஏமன் பாதுகாப்புப்படையினருக்கு தகவல் கிடைத்தது.

இச்சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் அவர்களுடன் நடத்திய சண்டையில் 28 அல்கொய்தாவினர் கைது செய்தனர் .

ஆறு பாதுகாப்புப்படை வீரர்கள் இந்தச் சண்டையின் போது பலியாயினர் என இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 7 மாதங்களுக்கு முன் அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவன் ஒருவரின் மகன் அப்துல்லா அல்-மெஹாதிர் கொல்லப்பட்டதாக ஜிங்கூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-2-4)

# தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை யாழ்.மாவட்டப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் இணையத்தளம் மூலம் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின்படி யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் 118 மாணவர்கள் 142 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.

இப் பாடசாலையின் சித்தி வீதம் 47 எனவும் சகல மாணவர்களும் 71 புள்ளிகளுக்கு மேல் பெற்று சான்றிதழ் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அதிபர் தெரிவித்தார்.

புனித ஜோன்.பொஸ்கோ பாடசாலையில் 110 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்கள் 59.5 சதவீதம் சித்தியடைந்ததாக அதிபர் தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரியில் 41 மாணவர்களும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 21 மாணவர்களும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை**

வி.அபிநயன் (183-மாவட்ட நிலை 05), அ.அபிநந்தன் (179-மாவட்ட நிலை 10), இ.ஆதிரையன் (178), இ.இளங்கீதன் (176), அ.அபிராம் (176), கி.அபிராமி (175), ஜெ.சரண் (175), ப.நிருத்திகன் (174),

அ.ஹரிசாந்த் (172), அ.ஆதித்தியா (172), உ.கார்த்திகன் (169), பி.நிஷங்கன் (169), ஜெ.நிவாசன் (169), இ.பிரியங்கா (169), த.கௌசிகா (168), இ.சங்கவி (168),

த.அபிநாத் (168), நி.ஆதவன் (167), த.ஜன்சிகா (167), சி.சந்துரு (166), கி.கோபிசன் (165), சி.காயத்திரி (165), க.தனுசாந் (164), க.பார்கவகசர்மா (164), இ.அரண் (164),

இ.தனுசன் (164), ந.சுமுகன் (163), சி.அபிசாதன் (163), சி.சஜீவன் (163), ஜெ.கஜீவன் (163), கே.அபிராமி (162), சு.காருண்ஜன் (161), வ.ஹம்சாநத் (161), ச.மோகனரஞ்சன் (131), வ.வக்சலாயன் (161),

தி.ஜீவனா (161), க.சுஜன் (160), அ.அபிராமி (160), சி.மதிவதனன் (160), சி.பவித்திரன் (159), இ.லதாங்கி (159), அ.அனுசிகா (159), க.பானுஜன் (159), ஜெ.ஜெகப்பிரவீன் (159), கே.தனுசன் (158),

டி.கவிப்பிரியன் (158), ர.வித்தியாராகவி (158), சி.பவித்திரா (158), சி.பாரதி (158), ச.சாகீத்தியன் (157), வி.டினோசன் (157), சி.நிஷாந்தன் (157), த.சாருஜா (157), பா.நரேன் (157), ஆ.டினுசன் (157),

ஈ.தீபிகா (157), ர.கீர்த்தனன் (156), ப.விஸ்ணுசூர்யா (156), சி.அபிநயா (156), கி.கோகுலன் (156), பா.சதுர்ஜன் (156), வி.லருசன் (156), ந.கிருத்திகா (156),

த.நிசான் (155), மு.பிரவீன் (155), சி.பிரணவன் (155), ம.கஜவர்சன் (155), த.சுவேதிகா (155), ப.ஜீவிதா (155), ர.கசோடினா (155), ந.அபிப்பிரியன் (154), ச.டிருபா (154), லோ.செந்தில்குமரன் (154),

அ.கீர்த்திபன் (154), கு.கஜீபன் (153), செ.கிருஷாந் (153), கே.யதுர்சன் (153), ச.அபிராமி (153), பா.ஐஸ்வர்யா (153), வி.சொரூபி (152), சி.மாதுமை (152), அ.தனுசியன் (152), கு.கௌசிகன் (152), ஜெ.வைஷ்ணவி(152),

செ.அஜித் (151), சி.ஆர்த்திகன் (151), அ.பவித்திரன் (150), கி.யதுசிகன் (150), சி.சாம்பவி (149), இ.பிரகலாதன் (148), ச.திருக்குமரன் (148), சி.வாகீசன் (148),

இ.அரவிந்தன் (148), த.ஆகாஷ் (148), மு.கஜார்த்தனி (148), ஆ.ஷோகீசன் (148), சி.சிவருஜன் (148), கு.அபர்ணா (148), சி.சிவவாசினி (148), உ.செந்தூரனி (147), சு.திருமுருகன் (147),

சே.யானுஜன் (147), இ.பிரியந்தி (147), ப.தஸ்மிகா (147), சி.காருண்சா (147), சி.ஜெயவைசாளி (147), ச.நாராயணி (147), வி.சுதர்ஷிகா (146), ச.விதுஷன் (145), க.பிருந்தவர்னன் (144),

ந.சஞ்சயன்(144), ஜெ.ஆரபி (144), கு.கஸ்தூரி (144), பி.காயத்திரி (143), சி.கஜலக்சன் (143), சி.துஷாந்தி (143), ஆ.அபிசன் (142), அ.துஷாரா (142). (140 புள்ளிகளுக்கு மேல் 14 மாணவர்கள் உள்ளனர்)

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

சி.சர்மிலன் (176), ம.துஷாரா (171), தி.மணிமோகன் (167), த.றேணுஜன் (167), பா.சானு (167), க.கேதுஷன் (164), க.சுஜித் (164), செ.நிருபா (163), லோ.துளசிகா (159), த.ரேணுஜா (157),

ரே.கர்சிகா (156), ஸ்ரீ.திலக்ஷி (156), வை.இசைப்பிரியன் (155), வி.மேனகன் (155), து.லக்ஷன் (153), ச.சுவேதசர்மா (151), உ.மோவிதா (151), சு.திலக்சன் (150), சி.யதுர்சன் (146), வே.லதீபா (144), வ.கம்சிகா (142),

**யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தி.**

க.விதுஷன் (154), இ.இராஜஜிதேந்திரன் (147), சி.அனுசியா (145) (83 வீதத்தினர் 71 புள்ளிகளுக்கு மேல் பெற்று சான்றிதழ் பெற தகுதி பெற்றுள்ளனர்).

**உடுவில் மகளிர் கல்லூரி**

பி.தாரணி (187-மாவட்ட நிலை 01), ஜே.சஜீவன் (177), கே.துவாரகன் (176), எஸ்.குகேசன் (175), எஸ்.பிரஜீகன் (174), எஸ்.தர்சிகா (172), எம்.டிரோஜா (172), எஸ்.அபிலாஸ் (170), எஸ்.மதுஷாயினி (170),

எம்.நிவேதா (170), பி.யாதவன் (169), ஏ.ஜோகான்ஜீவதாஸ் (168), ஜி.துவாஸ்ரா (167), ஜே.அகிலன் (164), ஜி.ஆரணி (164), எஸ்.கிஷானி (163), ஏ.கஜானன் (163), ஆர்.யராணியா (161),

கே.அபராஜிதன் (160), எம்.சங்கவி (160), கே.பிரசாத் (159), ஏ.யதூஷன் (156), எம்.டினோஜா (156), ஜே.மதுஷாலினி (156), எஸ்.கீதப்பிரியசர்மா (154), என்.நவரூபனா (154),

எம்.திவ்யா (153), பி.நெப்போலியன் நிஷான் (151), எஸ்.அபிநயா (151), பி.தோதிகா (151), வி.பிரியங்கா (150), எஸ்.அங்கஜன் (148), எஸ்.சயந்தன் (148), எஸ்.யானுகா (148), எம்.சங்கீதன் (145),

எம்.அட்சயா (145), எல்.நர்மதா (145), என்.சோபிகா (145), எஸ்.தியாபிரியா (143), கே.தேமதுரா (143), எம்.நிதுலா (142). (ச)

# தரம் 9, 11 மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை நவம்பரில்

## கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானம்

(வவுனியா)

வடக்கு மாகாண பாடசாலைகளில் 9,11 ஆம் தரங்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகளை நவம்பர் 15 ஆம் திகதி முதல் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 9,11 ஆம் தரங்களின் பிரதான 6 பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வவுனியா முதல் நிலை அலுவலகத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலக கணக்காளர் மற்றும் திட்டப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்திலேயே ஆண்டிறுதிப் பரீட்சை தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன. இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மேலும் தகவல் தருகையில்,

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் 9, 11 ஆம் தரங்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் (3 ஆம் தவணை) எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி முதல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதான 6 பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்களை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தயாரித்து வழங்குவதுடன் ஏனைய பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் வலயக் கல்வி அலுவலகங்களினால் வழங்கப்படும்.

அத்துடன் ஏனைய தரங்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை நவம்பர் மாத இறுதியில் வலயக் கல்வி அலுவலகங்களால் பரீட்சை வினாத்தாள்கள் வழங்கப்பட்டு நடத்தப்படும்.

இதற்கான மாணவர் தேர்ச்சி அறிக்கை பெற்றோர்களையும் அழைத்து விடைத்தாள் மதிப்பீடுகளைக் காண்பித்து மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்னர் வழங்கப்படும்.

இதனை விட அடுத்த ஆண்டுக்குரிய இலவசப் பாட நூல்களைப் பாடசாலைகளுக்கு வழங்கும் நிகழ்வுகளை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நிறைவு செய்யவுள்ளது.

இதன் மூலம் அடுத்த ஆண்டுக்குரிய இலவச பாட நூல்கள் மூன்றாம் தவணை இறுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும். இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ச-5)

# எப்போதும் படித்துக் கொண்டிருக்குமாறு பெற்றோர் என்னை வற்புறுத்தவில்லை

## தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவி சுபதா



"நான் படிப்பதற்குத் தேவையான சகல வசதிகளையும் அம்மா, அப்பா ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால் எப்போதும் படித்துக் கொண்டிருக்குமாறு என்னை அவர்கள் வற்புறுத்தியதில்லை.

மாலையில் விளையாடுவேன். இரவு 10 மணிவரையும் படிப்பேன். ஒரேயொரு பாடத்திற்கு மாத்திரமே வகுப்புச் சென்று வந்தேன். மிகுதி படிப்பெல்லாம் பாடசாலையில்தான்" என இவ்வருட 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் அகில இலங்கை ரீதியாக முதலிடத்தைப் பெற்ற மாணவி மாலவன் சுபதா தெரிவித்தார்.

திருக்கோவில் கல்வி வலயத்தைச் சேர்ந்த தம்பிலுவில் கலைமகள் வித்தியாலய மாணவி மாலவன் சுபதா, 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் 193 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியாக முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் மாணவி சுபதா மேற்படி தனது அடைவு குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவேன் என்று நான் நம்பினேன். ஆனால் இவ்வாறு அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெறுவேன் என நான் நினைக்கவில்லை. இதற்கு இறைவனின் அருள்தான் முதல் காரணம். நான் படிப்பதற்குத் தேவையான சகல வசதிகளையும் அம்மா, அப்பா ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால் எப்போதும் படித்துக் கொண்டிருக்குமாறு என்னை அவர்கள் வற்புறுத்தியதில்லை.

மாலையில் விளையாடுவேன். இரவு 10 மணிவரையும் படிப்பேன். ஒரேயொரு பாடத்திற்கு மாத்திரமே வகுப்புச் சென்று வந்தேன். மிகுதி படிப்பெல்லாம் பாடசாலையில்தான்.

அந்த வகையில் எனது அம்மா, அப்பா கற்றுத் தந்த ஆசிரியர்கள், எனது கல்லூரி அதிபர் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் எல்லோருக்கும் அத்துடன் இறைவனுக்கும் இந்த இடத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சில அர்ப்பணிப்புக்களைச் செய்தோம்**

மாணவி சுபதா இவ்வாறு பரீட்சையில் சித்தியடைந்தமை குறித்து அவரின் தந்தை மாலவன் கருத்துத் தெரிவிக்கையில்,

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு எனது மகளை அதிகமான பிரத்தியேக வகுப்புகளுக்கு நாம் அனுப்பி சுமைகளைக் கொடுக்கவில்லை.

ஆனால் மகளின் படிப்புக்காக சில அர்ப்பணிப்புக்களை எமது குடும்பத்தினர் செய்தனர். எனது மகளின் சாதாரண செயற்பாடுகள் அனைத்தையும் நாம் அனுமதித்தோம். பாடசாலை விட்டு வந்தபிறகு மாலை வேலைகளில் அவர் விளையாடுவாள்.

அதிகமான பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்பி அவள் மீது நாம் ஒருபோதும் சுமைகளைத் திணிக்கவில்லை. ஆனால் கடந்த 6 மாதங் களாகத் தொலைக்காட்சி பார்ப்பதற்கு அவளை நாம் அனுமதிக்கவில்லை. அதை மகளும் ஏற்றுக் கொண்டாள். அதனால் நாமும் தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டோம்.

இதேபோன்று அவளின் சில சுற்றுலா ஆசைகளையும் இந்தப் பரீட்சைக்காக ஒத்தி வைத்தோம். பரீட்சைக்குத் தயாராகும் எனது மகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்பதற்காக நாங்கள் நிர்மாணித்துக் கொண்டிருந்த எங்கள் வீட்டின் கட்டட வேலைகளை இடையில் நிறுத்தி வைத்தோம்.

இவை அனைத்துக்கும் சேர்த்து எனது மகள் எங்களுக்கு எல்லையற்ற சந்தோஷத்தைத் தேடித் தந்துள்ளாள் என்றார்.

மேற்படி மாணவி சுபதாவின் தந்தை மாலவன் வங்கி ஒன்றில் கடமை புரிகிறார். சுபதா ஆரம்ப வகுப்பு முதல் 2 ஆம் வகுப்பு வரை மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் கற்றுப் பின்னர் மூன்றாம் வகுப்பிலிருந்து தம்பிலுவில் கலைமகள் வித்தியாலத்தில் கற்று வருகின்றார் என்றார். (ச-5)

## இலங்கைப் பிரச்சினைக்கு...

நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் பொதுக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் பாடுபடப்போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது இரண்டாவது பதவி காலத்தின் பின்னர் சமாதானம் ஏற்படுத்தப்படும். ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும். மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காத விதத்தில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் காலங்களில் தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தின் ஒழுங்குகளில் தளர்வுகள் ஏற்படுத்தபடும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உலக அமைதிக்காக நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது, அதன் முயற்சிகளை குறைத்து மதிப்பிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாத அமைப்புக்களுடனான யுத்தங்களின் போது போர்ச் சட்டங்களை முழுமையாக பின்பற்ற முடியாது.

பயங்கரவாத அமைப்புகள் போர்ச் சட்டங்களை மதிக்காத காரணத்தினால் அதற்கு எதிராக போராடும் இராணுவங்களினால் போர்ச் சட்டங்களைப் பாதுகாப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட நூற்றாண்டு அபிவிருத்தி இலக்குகளில் பலவற்றை இலங்கை எட்டியுள்ளது.

இந்த நிலையில் 66 ஆவது ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தில் பலஸ்தீனமும் பங்கு பற்றக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும் என அவர் தமது எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார். (ச-5)

## புலிகளின் ஈழக் கனவை...

சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும்.

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தை அமைப் பதற்கு சிலர் முனைப்பு காட்டி வருகின்றனர். நாட்டின் சகல பிரதேசங்களையும் பாதுகாக்கும் வகையில் கடற்படை முகாம்கள் உருவாக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி முதல் ஒருமாத காலத்திற்கே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக 112 உறுப்பினர்களும் எதிராக 20 உறுப்பினர்களும் நேற்று வாக்களித்துள்ளனர். (ச-3,5)

## ஜனவரி மாதம்...

தகவல்களில் தெரியவருவதாவது,

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் இம் மாத ஆரம்பம் முதல் (3ஆம் தவணை ஆரம்பம் முதல்) நடைமுறைக்கு வரும் வகையில் மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றம் வழங்கப்பட்டது.

எனினும் இவ்வாசிரியர் இடமாற்றம் தொடர்பில் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கேட்டுக்கொண்டமைக்கமைவாக மீளாய்வு செய்யுமாறு தெரிவித்து வட்க்கு மாகாண ஆளுநரினால் இடை நிறுத்தப்பட்டது.

இது தொடர்பிலான மீளாய்வுப் பணிகளை கல்விவலய ரீதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு மீளாய்வுப்பணிகளைமேற்கொண்டது.

இந் நிலையில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை, ஆண்டிறுதிப்பரீட்சைகள் உட்பட்ட சில காரணங்களினால் ஆசிரியர் இடமாற்றத்தை அடுத்த ஆண்டு முதலாம் தவணை ஆரம்பத்தில் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வன்னி கல்வி வலயங்களிற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்து ஏனைய மாவட்டங்களிலிருந்து இடமாற்றம் கோரும் ஆசிரியர்களுக்கு உடனடியாக அனுமதி வழங்கப்படும் என வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கடந்தவாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

## அயோத்தி...

இருந்த தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பை ஒத்திவைக்குமாறு கோரி ஆர்.சி.திரிபாதி என்பவர் தாக்கல் செய்த மனு மீது வரும் 28ஆம் திகதி விசாரணை நடைபெறும் என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. பாபர் மசூதி-ராமஜென்ம பூமி பிரச்சினையில் தொடர்புடையவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (முன்னர் வந்த செய்தி இந்திய செய்திகள் பக்கத்தில்.) (ச-5)


**உடன் தேவை**

கணனியில் தமிழ், ஆங்கிலம் ரைப் செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் உடன் தேவை. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

**நியூகோல்டன் ஸ்டார்,**
226, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
0212226951, 0779522444

(2525)


## தரம்-4 படிக்கவே இல்லை...

யில் இறுதியுத்தம் இடம்பெற்றபோது 20.04.2009 அன்று இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற இம் மாணவன் வவுனியா அருணாசலம் முகாமில் ஆறு மாதங்கள் இருந்ததாகவும் அதன் போது எந்தவிதமான கற்றல் செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவரது தாயார் கூறினார்.

கிரிசிகனின் தந்தை கண்டாவளை பிரதேச செயலர் அலுவலகத்தில் சமூக சேவைகள் உத்தியோகத்தராக கடமையாற்றுகிறார்.

அம்மா வீட்டில், கிரிசிகனுக்கு ஒரு அக்கா அவர் தரம் 9இதில் கற்று வருகிறார். இடம் பெயர் முகாமிலிருந்து விடுதலையாகி யாழ்ப்பாணத்துக்கு வந்த கிரிசிகனின் குடும்பத்தினர் பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் வசித்து வருகின்றனர்.

இவர் யாழ்ப்பாணத்திற்கு வந்தததும் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் பாடசாலை அதிபர் முரளிதரன் கற்பதற்கு அனுமதி வழங்கினார்.

5ஆம் ஆண்டுக்கான கல்வியை மெதடிஸ்த மிசன் பாடசாலையிலேயே அவர் கற்று புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியம் வித்தியாலயத்தின் ஊடாக விண்ணப்பித்து வவுனியா காமினி வித்தியாலயத்தில் பரீட்சையை எழுதினார்.

பரீட்சையில் முதலிடம் பெற்ற மாணவன் கிரிசிகன் இது குறித்து கூறியதாவது,

நான் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தவுடன் எனது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கிய ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் அதிபர் அவர்களுக்கும் எனக்கு வகுப்பாசிரியராகவிருந்த வளர்மதி அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்கு முன்னதாக, எனது உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்னை இறுதிப் போரிலிருந்து காப்பாற்றிய இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தனியார் கல்வி நிறுவனத்திற்கு சென்ற எனக்கு கழிவுக்கட்டணத்தில் கற்பித்த அன்பழகன் ஆசிரியர் அவர்களுக்கும் எனது உள்ளம் கனிந்த நன்றிகள்.

**கணனிக்கல்வி கற்கிறேன்**

நான் புலமைப்பரிசில் பரீட்சை எழுதியபின் கணனி நிறுவனம் ஒன்றில் 100 வீத புலமைப்பரிசில் பெற்று கணனிக்கல்வியை கற்று வருகிறேன் அவற்றை வீட்டில் மீளக் கற்பதற் குரிய வசதிகள் இல்லை.

கண்டாவளை பிரதேச செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் எனது அப்பாவின் வருமானம் குடும்ப செலவுக்கே போதுமானதாக உள்ளது.

எனினும் கணனியை பெற்றுத்தருமாறு அப்பாவிடம் வேண்டுகோள் விடுப்பேன் நான் எதிர்காலத்தில் வைத்தியராக வரவேண்டும் என்றே ஆசைப்படுகிறேன் என்றார் அந்த மாணவன். (ச-5)

## பெற்றோரும் ஆசிரியர்...

எனக்கு ஒரு தங்கை உண்டு, நான் படிப்பதற்கான சகலவசதிகளையும் எனது பெற்றோர் ஏற்படுத்தித் தந்தனர்.

அதேபோன்று எமது கல்லூரி அதிபர் சிராணி மில்ஸ், வகுப்பாசிரியர் திருமதி சண் முகம் ஆகியோரும் என்னை ஊக்கப்படுத்தி நான் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற உதவி புரிந்தனர்.

அத்துடன் எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் அன்பழகன் அவர்களும் எனக்கு பல உதவிகளைப் புரிந்துள்ளார்.

அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து சமூகத்துக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம் என்றார்.

இதேவேளை சிற்பக்கலைஞராக தான் இருந்தபோதிலும் தனது மகளின் கல்வித் தேவைகளை சிறந்த முறையில் பூர்த்தி செய்து வந்ததாக தாரணியின் தந்தை பாலேந்திரன் தெரிவித்தார்.

இதேபோன்று எதிர்காலத்திலும் தனது மகளின் கல்வித்தேவைகளை சிறந்த முறையில் மேற்கொண்டு அவரின் எதிர்காலம் சிறப்புற பாடுபடுவேன் என்றும் அவர் ஆனந்தம் பொங்கக் கூறினார்.

இதேவேளை தனது மகளின் வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக அவரின் தாயார் கூறினார். (எ)

## லசந்த படுகொலைச்...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

படுகொலைச் சம்பவம் குறித்த சகல ஆதாரங்களும் தம்மிடம் காணப்படுவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

லசந்த படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

அவசரகாலச்சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல ஊடகவியலாளர்களான கீத் நொயார் மற்றும் உபாலி தென்னக்கோன் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னணி-யிலும் சரத் பொன்சேகா செயற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

படுகொலையாளிகளை பாதுகாக்க வேண்டாம் என மேர்வின் சில்வா ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

## நாடாளு...

நாயக்க ஆகியோர் இவ் அனுமதி மறுப்பை கண்டித்து உரையாற்றினார்.

இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்தார். (ச-5)


**ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின்**

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| **அன்பொளி கல்வியகம்** | **அன்பொளி கல்வி நிலையம்** |
| யாழ். இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

அனுமதிகளை 26.09.2010 ஞாயிற்றுக்கிழமைக்கு முன், பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு : பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டுவோம்.

(C-1272) இயக்குநர்கள்.



**கனடா விசா பெற ஆலோசனை**

யாழில் முதன் முதல் !!!
"Canadian Migration Consultant"
from
YLD Canada

Date : 25th Sep 2010
Time : 10.30 am
Venue : Tilko Holidays (Pvt) Ltd.
No. 70/6, K.K.S.Road, Jaffna.

தொடர்புகளுக்கு :-
T.Prathap : 0773535590
K.Amila : 0773114381

IIHS International Institute of Health Sciences | student WORLD | YLD Canada Immigration & Recruitment Services Limited.

(C-1271)



**Interview & Spot Admission**

"சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Health care Degrees"

- Nursing
- Physiotheraphy
- Pharmacy
- Health care administration

Admission for Sep - 2010

நேர்முகத் தேர்வு :-
Dr. Nihal de Silva
(Dean IIHS)

Date : 25.09.2010
Time : 10.30 am
Venue : Tilko Holidays (Pvt) Ltd.
No. 70/6, K.K.S.Road, Jaffna.

கற்கைநெறி முடிவடைந்தவுடன் உள்நாட்டில் / வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

தொடர்புகளுக்கு :-
T.Prathap : 0773535590
K.Amila : 0773114381

(C-1271)

ECU Edith Cowan | UH | Open University Malaysia | tafe South Australia | IIHS International Institute of Health Sciences


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.